


# பரிபூரண ஜீவன்

# PARIPOORANA JEEVAN

## இந்த மலைநாட்டை எனக்குத் தாரும்.

யோசுவா 14:12

THE TAMIL DISTRICT COUNCIL OF THE SIAG

September- October 2024

Volume : 64

ஆண்டு சந்தா ₹120/-

Issue : 5

## 76th Annual Conference, A.G. Campsite, Madurai




























ஆசிரியரிடமிருந்து........!



## வேறே ஆவியை உடைய மனிதன்

கிறிஸ்துவுக்குள் பிரியமான வாசகர்களுக்கு இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்!

தேவனால் சாட்சிப் பெற்ற, கர்த்தர் வாக்குப் பண்ணினதை சுதந்தரித்த, தேவத்திட்டத்தை தன்னுடைய வாழ்க்கையில் நிறைவேற்றின ஒரு மனிதனைக் குறித்து உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அந்த மனிதனின் பெயர் 'காலேப்'. அவரைக் குறித்து, '**என்னுடைய தாசனாகிய காலேப் வேறே ஆவியை உடையவனாயிருக்கிறபடியினாலும், உத்தமமாய் என்னைப் பின்பற்றி வந்தபடியினாலும், அவன் போய் வந்த தேசத்திலே அவனை சேரப்பண்ணுவேன்**' என்று கர்த்தர் கூறுகிறார் (எண். 14:24).

காலேப் யூதா கோத்திரத்தில் உள்ள எப்புன்னேயின் குமாரன் (எண்.13:6). எகிப்திலிருந்து கானான் தேசத்திற்கு செல்ல மோசேயோடு தன்னை இணைத்துக்கொண்டவர். கானான் தேசத்தை வேவுப்பார்ப்பதற்கு மோசேயினால் அனுப்பப்பட்ட 12 பேரில் இவரும் ஒருவர். எகிப்திலிருந்து புறப்பட்ட இலட்சக்கணக்கான ஜனங்களில் கானான் தேசத்திற்குள் பிரவேசித்தவர்கள் இரண்டு பேர் மட்டுமே. அவர்களில் ஒருவர் காலேப். காலேபின் பெயர் வேதத்தில் 32 முறை மட்டுமே வருகிறது. எண்ணாகமம் 13,14 அதிகாரங்கள், யோசுவா 14, 15 அதிகாரங்கள் மற்றும் நியாயாதிபதிகள் 1ம் அதிகாரம் ஆகிய 5 அதிகாரங்களில் மட்டுமே அவரைக்குறித்து அதிகம் கூறப்பட்டுள்ளது. ஆகிலும் அவருக்குள் ஒரு வித்தியாசமான, வேறே ஆவி இருந்ததை இந்த பகுதியில் நாம் காணமுடியும். இவருடைய பார்வை, குணம், மனப்பான்மை அனைத்தும் மற்ற இஸ்ரவேல் ஜனங்களைக் காட்டிலும் வேறுப்பட்டதாக இருந்தது. காலேப்பின் ஆவி உத்தமமாக கர்த்தரைப் பின்பற்றும் ஆவி, விசுவாசத்தின் ஆவி மற்றும் சுதந்தரிக்கும் ஆவி. இதுகுறித்து சற்று விரிவாக பார்ப்போம்!

### உத்தமமாய் கர்த்தரை பின்பற்றும் ஆவி
### Spirit of COMMITMENT

காலேப் கர்த்தரை உத்தமமாய் பின்பற்றினார் என்று வேதம் 6 இடங்களில் கூறுகிறது (எண்ணா.14:24;32:11;உபா.1:36; யோசுவா 14:8,9,14). இது ஆங்கிலத்தில் "He wholly, whole-heartedly, fully followed the Lord" என்றெல்லாம் கூறப்பட்டுள்ளது. அதாவது அவர் கர்த்தரை "முழுமையாக, முழு இருதயத்தோடு, பூரணமாக பின்பற்றினார்". இதன் அர்த்தத்தை நான் 3 விதங்களில் பார்க்கிறேன்.

**முதலாவதாக,** முழுமையாக பின்பற்றுதல் என்றால் வாழ்நாள் முழுவதும் கர்த்தரை பின்பற்றுதலாகும். வாலிபத்திலும், முதிர்வயதிலும், வனாந்தரத்திலும், கானான் தேசத்திலும் காலேப் கர்த்தரை எந்த பின்மாற்றமும் இல்லாமல் பின்பற்றினார்.

**இரண்டாவதாக,** முழு இருதயத்தோடு கர்த்தரை பின்பற்றுதலாகும். உலகம், மாமிசம், பிசாசிற்கு இருதயத்தில் இடம்கொடாதபடி கர்த்தரையே முழு இருதயத்தோடும், சிந்தையோடும், ஆத்துமாவோடும், பெலத்தோடும் நேசித்து வாழும் வாழ்க்கையை இது குறிக்கிறது (மத்.22:37,38). இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரை உத்தமமாய் பின்பற்றவில்லை. இச்சை, விக்கிரகாராதனை, வேசித்தனம், முறுமுறுப்பு, கர்த்தரை பரீட்சை பார்த்தல் ஆகியவை அவர்களிடத்தில் காணப்பட்டது (1கொரி.10:5-10). அவர்களெல்லாரும் வனாந்தரத்தில் அழிக்கப்பட்டார்கள். சாலமோன் வயதுசென்றபோது, அவனுடைய இருதயம் கர்த்தரோடே உத்தமமாயிருக்கவில்லை. அந்நிய ஸ்திரீகளோடும் அந்நிய தேவர்களோடும் ஐக்கியப்பட்டிருந்தான் என்று வேதம் கூறுகிறது (1 இராஜா.11:4-9). ஆனால் காலேப் உத்தமமாய், முழு இருதயத்தோடு கர்த்தரை பின்பற்றினார். ஜனங்கள் பொன் கன்றுக்குட்டியை வணங்கும்போது அந்த கூட்டத்தில் காலேப் இல்லை. ஜனங்கள் மோசேக்கு விரோதமாக கலகம்பண்ணும்போது, அந்த கூட்டத்தில் காலேப் இல்லை. ஜனங்கள் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுக்கும்போது, அந்த கூட்டத்திலும் காலேப் இல்லை.

**மூன்றாவதாக,** உத்தமமாக முழுமையாக பின்பற்றுதல் என்றால் எந்த சூழ்நிலைகளிலும் கர்த்தரை பின்பற்றுதலாகும். காலேப் வனாந்திரத்தில் பல சவால்களை சந்தித்தார். கஷ்டங்கள், எதிர்ப்புகள், பாடுகளின் ஊடே கடந்து சென்றார் (எண்ணா.14:10;13:33). ஆகிலும் கர்த்தரை நேசித்து பின்பற்றினார். இன்று அநேகர் சவுகரியமான சூழ்நிலையில் மட்டும் கர்த்தரை பின்பற்றுகின்றனர். பிரச்சனைகள், பாடுகள், இழப்புகள் வரும்போது கர்த்தரை விட்டு பின்வாங்கி போகிறார்கள். நீங்கள் கர்த்தரை காலேபைப் போல உத்தமமாக எல்லா சூழ்நிலைகளிலும் பின்பற்றுகிறீர்களா? '**தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப் பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது**' (2 நாளா. 16:9) என்று வேதம் கூறுகிறது.

## விசுவாசத்தின் ஆவி
## Spirit of CONFIDENCE

கர்த்தர் மோசேயிடம் ஒவ்வொரு கோத்திரத்திலும் ஒருவர் தெரிந்தெடுக்கப்பட்டு 12 நபர்களை கானான் தேசத்தை வேவுபார்க்க அனுப்பச் சொல்லி கட்டளையிட்டார். அவ்வாறு அனுப்பப்பட்டதில் யூதா கோத்திரத்திலிருந்து காலேப் சென்றார். 12 பேரும் 40 நாட்கள் கானான் தேசத்தை சுற்றிப்பார்த்துவிட்டு, தேசத்தின் கனிகளை மோசேயினிடத்தில் கொண்டு வந்தார்கள் (எண்ணா.13:1-26). ஆனால் அதில் 10 பேர் தாங்கள் பார்த்து வந்த தேசத்தைக் குறித்து துர்ச்செய்தி பரம்பச் செய்தார்கள். தேசத்தில் குடியிருக்கிற ஜனங்கள் பலவான்கள், பட்டணங்கள் அரணிப்பானவைகள், இராட்சத பிறவிகள் அங்கு இருக்கிறார்கள். ஆகவே எகிப்துக்கு திரும்பிப் போவதே உத்தமம் என்றார்கள் (எண்ணா.13:28,33; 14:1-3).

இந்த சூழலில் காலேப் மோசேக்கு முன்பாக ஜனங்களை அமர்த்தி, '**நாம் உடனே போய் அதைச் சுதந்தரித்துக் கொள்வோம்; நாம் அதை எளிதாய் ஜெயித்துக் கொள்ளலாம்**' என்றும் (எண்ணா.13:30), "**கர்த்தர் நம்மோடு இருக்கிறார்; அவர்களுக்கு பயப்பட வேண்டியதில்லை. அவர்கள் நமக்கு இரையாவார்கள். அவர்களைக் காத்த நிழல் அவர்களைவிட்டு விலகி போயிற்று**" என்றும் கூறுகிறார் (எண்ணா.14:9). இங்கு காலேபுக்கு இருந்த விசுவாசத்தின் ஆவியை காண்கிறோம். காலேபும் யோசுவாவும் தவிர மற்ற 10 பேரும் கூறியது

அனைத்தும் உண்மைத்தான். ஆனால் அவர்கள் மாம்சீக கண்ணோட்டத்தில் பார்த்தனர். தங்களோடு கர்த்தர் இருக்கிறார் என்பதையும், கர்த்தர் பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்தை தருவேன் என்று வாக்குப்பண்ணினதையும் மறந்துவிட்டனர் (யாத்.3:8;6:8). கர்த்தர் இதுவரை பல ராஜாக்களையும் ஜாதிகளையும் முறியடித்து நடத்தி வந்ததை மறந்தனர். அவர்கள் Grapes (திராட்சை), Giants (இராட்சதர்கள்) ஆகியவற்றை பார்த்தார்கள். ஆனால் தேவனையோ (God) பார்க்க தவறிவிட்டனர்.

காலேபும் யோசுவாவும் கர்த்தருடைய வாக்குத்தத்தத்தையும் வல்லமையையும், மகத்துவத்தையும் பார்த்தனர். அவர்களுக்கு முன்பாக அங்கிருந்த இராட்சதர்கள் வெட்டுக்கிளிகளாக தோன்றினார்கள். ஆனால் மற்ற 10 பேரும் தங்களை மற்றவர்களுக்கு முன்பாக வெட்டுக்கிளிகளாக உணர்ந்தனர் (எண்.13:33;14:9). தேவனை விட்டுவிட்டால் அற்பமானவர்கள் கூட பலவான்களாகத் தெரிவார்கள். சிறிய பிரச்சனைகூட பெரியதாக தோன்றும்.

நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன் என்று பவுல் கூறுகிறார் (2 தீமோ.1:12). நம்முடைய தேவன் ஜீவனுள்ளவர், வல்லமையுள்ளவர், பெரியவர், மாறாதவர் என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். நம்முடைய பிரச்சனைகள், சவால்கள் ஆகியவற்றை காட்டிலும் இயேசு பெரியவர். அவிசுவாசம் நம்மை பின்நோக்கி செல்லவைக்கும் (எண்ணா. 14:3). ஆனால் விசுவாசம் தேவன் நமக்கு முன்பாக வைத்திருக்கும் ஆசீர்வாதத்திற்கு நேராக நம்மை கொண்டு செல்லும். பயம், கவலை ஆகியவற்றை களைந்து விசுவாசத்தில் வளருவோம். காலேபின் விசுவாசம் உங்களுக்கு உண்டா? விசுவாசத்தில் வளர வேதத்தை அதிகமாக வாசியுங்கள். கர்த்தர் செய்த அற்புதங்களை தியானியுங்கள் (ரோமர் 10:17). Faith sees the invisible; Faith believes in incredible; Faith receives the impossible. “விசுவாசம் காண முடியாததை காணும்; நம்பமுடியாதவைகளை நம்பும்; சாத்தியமில்லாதவைகளை பெற்றுக்கொள்ளும்”, என்று ஒரு தேவ மனிதன் கூறுகிறார். எனவே விசுவாச கண்களால் கர்த்தரையே நோக்கிப் பாருங்கள்! விசுவாச வார்த்தைகளோடு செயல்படுங்கள்! ஜெயம் நிச்சயம் உண்டு!

## சுதந்தரிக்கும் ஆவி
## Spirit of CONQUEST

இறுதியாக, காலேபுக்குள் இருந்த ஆவி ‘சுதந்தரிக்கும் ஆவி’. தன்னுடைய முதிர்வயதில் கானானுக்குள் நுழைந்ததைக் குறித்து காலேப் திருப்தியடைய வில்லை. தன்னுடைய 85வது வயதில் காலேப் கூறுவதைக் கேளுங்கள்: **“இந்த மலைநாட்டை எனக்குத் தாரும். அங்கே ஏனாக்கியரும், அரணிப்பான பெரிய பட்டணங்களும் உண்டு... கர்த்தர் என்னோடிருப்பாரானால், கர்த்தர் சொன்னபடி ஏனாக்கியரைத் துரத்திவிடுவேன்”** என்று கூறுகிறார் (யோசுவா 14:11,12). காலேப் கானானுக்குள் பிரவேசித்தபின் தாழ்வான இடத்தில் திருப்திக் கொள்ளாமல் மேலான மலைநாட்டை கேட்டுப் பெற்றுக்கொண்டார். எபிரோன் அவனுக்கு சுதந்தரமாயிற்று என்று வேதம் கூறுகிறது (யோசுவா 14:14). 85 வயதுடைய காலேப் அங்குள்ள ஏனாக்கின் மூன்று இராட்சத உருவமுடைய குமாரர்களோடு சண்டையிட்டு துரத்திவிடுவதை சற்று கற்பனை செய்து பாருங்கள் (யோசுவா 15:14; நியா.1:20). தேவனோடு இணைந்து செயல்பட்டு வெற்றி பெற்றார். மலைநாட்டை சுதந்தரித்தார். ‘தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாக இருப்பவன் யார்?’ (ரோமர் 8:31).

எபிரோன் கடல்மட்டத்திலிருந்து 3040 அடி உயரத்திலுள்ள பாலஸ்தீனத்தின் உயர்ந்த பட்டணம். பின்நாட்களில் இது அடைக்கலப் பட்டணங்களில் ஒன்றாகவும்

(யோசுவா 20:7), தாவீதின் முதல் 7 ஆண்டுகால ஆட்சியில் தலைநகரமாகவும் இருந்தது (2 சாமு. 2:11).

நம்முடைய வாழ்வில் ஒருபோதும் 'அடைந்தாயிற்று' என்ற எண்ணம் வரக்கூடாது ("I've arrived" mentality). காலேபின் ஆவி கற்றுக்கொண்டே இருக்கும் ஆவி, வளர்ந்துகொண்டே இருக்கும் ஆவி, மேலானவைகளை சுதந்தரிக்கும் ஆவி (பிலி. 3:12). காலேப்புக்கு தன்னுடைய 85வது வயதிலும் சுதந்தரிக்க வேண்டும் என்கிற துடிப்பு இருந்தது. கர்த்தருக்காக செயல்பட வயது ஒரு தடை இல்லை. இறுதி மூச்சு இருக்கும் வரை செயல்படலாம். மோசே தன்னுடைய 80வது வயதில் கர்த்தர் தந்த ஊழியத்தை ஏற்று நிறைவேற்றினார். ஜார்ஜ் முல்லர் (1805-1898) என்ற தேவ மனிதர் தன்னுடைய 70 வயதிற்குப் பிறகு 17 மிஷனரி பயணங்கள் மேற்கொண்டார். 42 நாடுகளைச் சுற்றி 20 லட்சம் மைல்கள் நிலத்திலும் நீரிலும் பிரயாணம் செய்து ஆயிரக்கணக்கான பிரசங்கங்கள் செய்து ஏறக்குறைய 30 லட்சம் மக்களுக்கு கிறிஸ்துவின் அன்பை எடுத்துரைத்தார் என்று சரித்திரம் கூறுகிறது.

கர்த்தர் நம்மை கிராமங்களையும், பட்டணங்களையும், தேசத்தையும் சுதந்தரிக்க அழைத்திருக்கிறார். கர்த்தர் உங்களை வைத்திருக்கிற இடங்களிலுள்ள ஆத்துமாக்களை நீங்கள் சுதந்தரிக்க வேண்டும். கர்த்தர் உங்களுக்கு தந்த இரட்சிப்பில் திருப்தியடைந்து இருக்காமல், இரட்சிக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்ற பிரயாசப்படுங்கள். நீங்கள் இருக்கும் இடங்களில் உப்பாக, ஒளியாக செயல்படுங்கள். காலேப் சத்துருக்களை துரத்திவிட்டதுபோல (யோசுவா 15:14), நீங்களும் உங்கள் பகுதியிலுள்ள சத்துருவின் கிரியைகளை விரட்டியடியுங்கள். விக்கிரகத்தின் ஆவி, குடியின் ஆவி, வேசித்தன ஆவி, லஞ்ச, ஊழல் ஆவி ஆகியவற்றை துரத்துங்கள். "என் நாமத்தினாலே பிசாசுகளை துரத்துவார்கள்" என்று இயேசு கூறினார் (மாற்கு 16:17). மேலும் பரலோகராஜ்யம் பலவந்தம் பண்ணப்படுகிறது. பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதை பிடித்துக் கொள்கிறார்கள் என்று வேதம் கூறுகிறது (மத்தேயு 11:12). ஜெபத்தின் மூலமாகவும் சுவிசேஷத்தை அறிவிப்பதின் மூலமாகவும் ஆத்துமாக்களை சுதந்தரிப்போம்.

ஆம் பிரியமானவர்களே! காலேபின் சுதந்தரிக்கும் ஆவி நமக்குள் காணப்படட்டும்! ஆத்துமாக்களை சுதந்தரிப்போம்! கிராமங்கள், பட்டணங்களை சுதந்தரிப்போம்! தேசத்தை இயேசுவுக்காக சுதந்தரிப்போம்!.

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மண்டல தலைமைப் போதகர், திருச்சி மத்திய மண்டலம்.

---

## பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும் உதவித் தொகை அனுப்ப வேண்டிய விபரம்

காசோலை / டிராப்ட் எடுக்கும்போது Tamil District Council of SIAG என்று எடுத்து பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்று குறிப்பிட்டு அனுப்பவும். உங்கள் ஸ்தல சபை போதகர் மூலமாகவும் பிரதேச பொருளாளருக்கு அனுப்பி வைக்கலாம். மணியாடர் அனுப்புவதை தவிர்க்கவும். பத்திரிக்கை ஊழியத்திற்கு மணியாடர் மூலம் தான் அனுப்ப முடியும் என்ற நிலையில் உள்ளவர்கள் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

### ஏ.ஜி. தலைமை அலுவலகம்

30, நாவலர் நகர், மதுரை-625 016. போன் : 0452 4200664

# ஜெபத்தைக் குறித்த இயேசுவின் போதனைகள்



சுவிசேஷப் புத்தகங்களில் இயேசு கிறிஸ்துவின் ஜெபப் போதனைகள் மத்தேயு சுவிசேஷத்தில் பத்து இடங்களிலும், மாற்கு சுவிசேஷத்தில் ஐந்து இடங்களிலும், லூக்காவில் பத்து இடங்களிலும், யோவானில் மூன்று இடங்களிலும் உள்ளது. இயேசுவின் ஜெபத்தைக் குறித்து போதனைகளிலிருந்து 15 காரியங்களை நாம் கற்றுக்கொள்ள முடியும்.

1. **உங்கள் எதிராளிகளுக்காக ஜெபியுங்கள்** (மத்.5:44) என்று இயேசு தன் ஜெபப் போதனையைத் துவக்கினார். ஜெபத்தைக் குறித்து இயேசு கூறிய முதலாவதாக காரியம் இதுவாகும். லூக்கா 6:28-ம் இதே காரியத்தையே வலியுறுத்துகிறது. இவ்வாறு இயேசு கற்பிப்பதற்குக் காரணம் நம்முடைய குணாதிசயம் தேவனுடைய மாதிரியைப் பின்பற்றுவதாக இருக்க வேண்டும். நம் எதிராளிகளுக்காக ஜெபிப்பதற்கு நான்கு விதமான காரியங்களைச் செய்ய வேண்டும். அவர்களை நேசிக்க வேண்டும், அவர்களைப் பற்றி நன்மையாகப் பேச வேண்டும், அவர்களுக்கு நன்மைசெய்ய வேண்டும், ஜெபிக்க வேண்டும்.

2. **தனித்திருந்து ஜெபிக்க வேண்டும்** (மத்தேயு 6:5-6). பொது இடங்களில் ஜெபிப்பது தவறு என்று சொல்லவில்லை. மற்ற நபர்களைக் காட்டிலும் நான் மிகவும் பரிசுத்தவான், ஆவிக்குரிய நிலையில் உயர்ந்தவன் என்று காட்டிக் கொள்ளும் தவறான எண்ணத்தைச் சரி செய்கிறார். ஜெபத்தின் இரகசியமே இரகசியமாக ஜெபிப்பதுதான்.

3. **குறிப்பாக ஜெபிக்க வேண்டும்** (மத்தேயு 6:7-13; லூக்கா 11:1-4). நாம் பரமண்டல ஜெபத்தை ஆராய்ந்து பார்க்கும்போது, மீண்டும், மீண்டும் ஒரே காரியத்தை சொல்லி அலப்பும் ஜெபத்தை இயேசு சரிபடுத்துவதைப் பார்க்கிறோம். பரமண்டல ஜெபம் நாம் குறிப்பாக ஜெபிக்கவும், உண்மையாக ஜெபிக்கவும் கற்றுக் கொடுக்கிறது

4. **விடாப்பிடியாக ஜெபத்தில் தரித்திருக்க வேண்டும்** (லூக்கா 11:5-13; மத்தேயு 7:7-11). இந்த இரண்டு வேதபகுதியும் ஒரே காரியத்தைக் கற்பிக்கிறது. தொடர்ச்சியாகக் கேட்பது, தொடர்ந்து தேடுவது, தொடர்ந்து தட்டுவது. மேலும் லூக்கா 18:1-8-ல் பதில் கிடைக்கும் மட்டும் ஜெபத்தில் உறுதியாக இருப்பதைக் குறித்து இயேசு ஒரு உவமையை சொன்னார்.

5. **அறுவடைக்கு ஆட்கள் வேண்டி ஜெபிக்க வேண்டும்** (மத்.9:38; லூக்கா 10:2). திரளான ஜனக்கூட்டத்தைக் கண்டு, இயேசு "அறுவடையோ மிகுதி வேலையாட்களோ இல்லை" என்றார். சபையின் உண்மையான பிரச்சனை ஊழியத்திற்கு ஆட்கள் தேவை என்பதே. ஆகவே அறுவடைக்கு ஆட்களை தேவன் எழுப்ப ஜெபிக்க வேண்டும்

6. **நாம் உபவாசத்தோடு ஜெபிக்க வேண்டும்** (மாற்கு 9:29). நாம் ஜெபிக்காதபோது அன்றாட வாழ்வில் நமக்கு இருக்கும் பிரச்சனைகள் எதிர்கொள்ள ஆவிக்குரிய அதிகாரம் நமக்கு இல்லாமல் போய்விடும். சீஷர்களுக்கு இந்தப் பிரச்சனை இருந்தது. உபவாசத்தோடு ஜெபிக்கும்போது நமக்குள் மாற்றம் ஏற்படுகிறது. பிரச்சனைகளை எதிர்கொள்ள வல்லமை அதிகரிக்கிறது.

7. **மற்றவரோடு ஒருமனப்பட்டு ஜெபிக்க வேண்டும்** (மத்தேயு 18:19-20). இரண்டு பேராவது, மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார். ஒருமனப்பட்டு ஜெபிக்கும்போது பதில் கிடைக்கும் என்று இயேசு வாக்குப்பண்ணியுள்ளார்.

8. **தாழ்மையோடு ஜெபிக்க வேண்டும்** (லூக்கா 18:9-14). பரிசேயன் மற்றும் ஆயக்காரன் ஆகியோரின் ஜெபத்தைக்குறித்த உவமையில் நாம் தாழ்மையாக ஜெபிக்க வேண்டும் என்று இயேசு கற்பித்தார்.

9. **ஆராதிக்கிற இடம் ஜெபிக்கிற இடமாக இருக்க வேண்டும்** (மத்தேயு 21:13; மாற்கு 11:17; லூக்கா 19:46). புத்தகத்திலும் நாம் கூடும் ஆலயம் ஜெபிக்கிற இடமாக இருக்க வேண்டும் என இயேசு கூறியதாக கூறப்பட்டுள்ளது.

10. **விசுவாசத்தோடு ஜெபிக்க வேண்டும்** (மாற்கு 11:22-24; மத்தேயு 21:22). தேவன் மேல் விசுவாசமாய் இருங்கள் என்று இயேசு சொன்னார். "எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி தான் சொன்னபடியே நடக்கும்" என்று தன் இருதயத்திலே சந்தேகப்படாமல் விசுவாசித்தால் அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன்.

11. **மன்னிக்கும் குணத்துடன் ஜெபிக்க வேண்டும்** (மாற்கு 11:25). நாம் ஜெபிக்கும் போது நம்மைசுற்றிப் பார்த்து ஒருவர் பேரில் யாதொரு குறை உண்டாயிருக்குமானால் அந்தக் குறையை அவர்களுக்கு மன்னியுங்கள் என்று இயேசு சொன்னார். மத்தேயு 5:23-24 பார்க்கவும்.

12. **நீதியோடு ஜெபிக்க வேண்டும்:** ஜெபத்தின் மூலம் தன்னுடைய சுயநலத்திற்காக ஜனங்கள் மேல் அதிக உரிமைஎடுத்துக்கொண்ட பரிசேயர்களை மாற்கு 12:40-ல் குற்றம் சாட்டுகிறார். சுயநலத்திற்காக ஆவிக்குரிய வேஷம் தரிக்கின்றனர். நம்முடைய வாழ்வில் எல்லாக் கட்டத்திலும் உண்மையாகவும் நேர்மையாகவும் இருந்து ஜெபிக்க வேண்டும்.

13. **ஆபத்துக் காலத்தில் நீங்கள் காப்பாற்றப்படுவதற்கும், இரண்டாம் வருகையில் தேவனுக்கு முன்பாக தகுதியுள்ளவர்களாய் நிற்பதற்காகவும் வேண்டிக்கொள்ளுங்கள்** (மத்தேயு 24:20; மாற்கு 13:18; லூக்கா 21:36). இது உபத்திரவ காலத்தைக் குறிக்கிறது.

14. **இயேசுவின் நாமத்தில் ஜெபிக்க வேண்டும்** (யோவான் 14:13-14; 15:17; 16:23-26). இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கும்போது ஜெபத்திற்கு இயேசு கிறிஸ்துவின் அதிகாரம் உறுதுணையாக நிற்கிறது.

15. **கடைசியாக நாம் சோதனைகளுக்கு தப்பித்துக்கொள்ள ஜெபிக்க வேண்டும்** (லூக்கா 22:39). கெத்சமனே தோட்டத்தில் பேதுருவையும், சீஷர்களையும் பார்த்து சோதனைக்கு உட்படாதபடி விழித்திருந்து ஜெபியுங்கள் என்றார். ஜெபம் இல்லையென்றால் ஆவிக்குரிய வாழ்வில் நாம் பெலவீனம் உள்ளவர்களாக மாறிவிடுவோம்.

இதன் தொடர்ச்சி 10-ம் பார்க்கவும்



# ஐக்கியம்


## திருமதி. கெட்சியாள் மோகன்

President, Women's Fellowship Department


கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு, ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த இதழில் தேவபிள்ளைகளாகிய நாம், ஒருவரோடொருவர் 'எப்படி ஐக்கியமாயிருக்க வேண்டும்?' என்பதை தியானிக்கப் போகிறோம். 'நாம் ஒருவரோடொருவர் எப்படி நல்ல உறவை வளர்த்துக் கொள்வது?' என்று ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, தமது மலைப்பிரசங்கத்தில் நமக்குப் போதித்திருக்கிறார். அந்த பாக்கிய வசனங்களில் (மத்தேயு 5:1-11) சொல்லப்பட்டிருப்பவைகளை நாம் பின்பற்றும்போது, தேவனோடும் சகமனிதர்களோடும் நல்ல உறவை வளர்த்துக் கொள்ள முடியும். நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருந்தால், ஆண்டவருடைய சீஷர்களாக இருப்போம் (யோவான் 13:35). நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும் என்று ஆண்டவராகிய இயேசு பிதாவினிடத்தில் நமக்காக வேண்டிக்கொள்கிறார். அதோடுகூட, நாம் ஒருமைப்பாட்டில் தேறினவர்களாக இருக்கும்படிக்கும் அவர் வேண்டிக்கொள்கிறார் (யோவான் 17:11,23). அப்படியானால், கிறிஸ்தவ ஜீவியத்திற்கு இந்த ஒருமைப்பாடும் ஐக்கியமும் எவ்வளவு இன்றியமையாதது என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

### ஒருவரோடொருவர் ஐக்கியம்

ரோமர் 15:5-7 வரையுள்ள வசனங்களில், "நாம் ஒருமனப்பட்டு பிதாவாகிய தேவனை ஒரே வாயினால் மகிமைப்படுத்துவதற்கு, தேவன் நமக்கு பொறுமையையும் ஆறுதலையும் அளிக்கிறார்'' என்று வாசிக்கிறோம். மற்றவர்களுடன் ஒருமனப்படுவதற்கு பொறுமை மிகவும் அவசியமாயிருக்கிறது. நாம் ஏகசிந்தையுள்ளவர்களாக இருப்பதற்கு, கிறிஸ்துவே நமக்கு முன்மாதிரியாக இருக்கிறார். நாமும் அவருடைய முன்மாதிரியைப் பின்பற்றி, கிறிஸ்து நம்மை ஏற்றுக்கொண்டதுபோல, நாமும் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ள வேண்டும். நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், நீடிய பொறுமையையும், தரித்துக்கொண்டு, ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்கு குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்தது போல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்... இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள் என்று கொலோசெயர் 3:12-15 வரையுள்ள வசனங்களில் வாசிக்கிறோம்.

பரிசுத்தரும், தேவனுக்குப் பிரியருமாய் வாழவேண்டுமென்றால், உருக்கமான இரக்கம், தயவு, நீடியபொறுமை, இவைகளைத் தரித்துக்கொண்டு, ஒருவரையொருவர் தாங்க வேண்டும். அதோடுகூட ஒருவரையொருவர் மன்னிக்க வேண்டும் என்று வேதாகமம் போதிக்கிறது. இந்த குணங்கள் நமக்குள் காணப்படுகிறதா? மற்றவர்களை மன்னித்து ஏற்றுக்கொண்டு ஒருமனப்பட்டவர்களாக பிதாவாகிய தேவனை மகிமைப்படுத்துகிறோமா என்று நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போமாக!

பவுல் தெசலோனிக்கேயருக்கு எழுதிய முதலாம் நிருபத்தில் (5:12-15) நாம் வாசிக்கிறபடி, நாம் மற்றவர்களை அன்பாய் எண்ணிக்கொள்ள வேண்டும். மற்றவர்களைப் புரிந்துகொள்ள வேண்டும். புரிந்துகொண்டு ஒழுங்கில்லாதவர்களுக்கு புத்தி சொல்ல வேண்டும். திடனற்றவர்களைத் தேற்றவும், பலவீனரைத் தாங்கவும் வேண்டும். மற்றவர்கள் செய்யும் தீமைக்குத் தீமை செய்யாதபடிக்கு எப்பொழுதும் நன்மை செய்ய நாட வேண்டும்.

ரோமர் 12:10ஆம் வசனத்தில் எழுதியுள்ளபடி, சகோதர சிநேகத்தில் ஒருவர் மேலொருவர் பட்சமாயிருக்க வேண்டும். கனம் பண்ணுகிறதிலேயும் ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ள வேண்டும். 1பேதுரு4:8-11 வரையுள்ள வசனங்களில் வாசிக்கிறபடி, ஒருவர்மேலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாகவும், முறுமுறுப்பில்லாமல் ஒருவரையொருவர் உபசரிக்கிறவர்களாகவும், தேவன் தந்தருளும் பெலத்தின்படி உதவி செய்கிறவர்களாகவும் இருக்க வேண்டும். Let us understand people, love people, help people, care for them and do something good for them.

### குடும்பத்தில் ஐக்கியம்

கொலோசெயர் 3:17-21 வரையுள்ள வசனங்களின்படி புருஷர்கள் தங்கள் மனைவிகளில் அன்புகூர்ந்து, அவர்கள்மேல் கசந்துகொள்ளாமல் இருக்க வேண்டும். மனைவிகள் கர்த்தருக்கேற்கும்படி தங்கள் சொந்த புருஷருக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். கர்த்தர் விரும்பாத காரியத்தைத் தவிர, மற்ற அனைத்திலும் கீழ்ப்படிந்திருக்க தேவன் எதிர்பார்க்கிறார். புருஷர்களும் கிறிஸ்து சபையில் அன்புகூருகிறதுபோல, தங்கள் மனைவிகளின் குறைவுகள் மத்தியிலும் அன்புகூர வேண்டும் (எபேசியர் 5:21-25). ஆதியாகமம் 2:24ஆம் வசனத்தில் வாசிக்கிறபடி புருஷனானவன் தன் தகப்பனையும் தன் தாயையும்விட்டு தன் மனைவியோடு இசைந்திருக்க வேண்டும். அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள். Leaving and cleaving விடுதலும் இசைதலும் நடைபெற வேண்டும். அதினால், பெற்றோர்களை கைவிட்டுவிடவோ அலட்சியப்படுத்தி விடவோகூடாது. அவர்களுக்குரிய மரியாதையோடு அவர்களைக் கவனித்துக் கொள்ளவும் வேண்டும். புருஷன் மனைவி இவருடைய ஐக்கியத்திற்கிடையே யார் ஒருவரும் வர அனுமதிக்கக்கூடாது. இப்படி எல்லா உறவுகளையும் சரியான இடத்தில் வைத்துக்கொள்வோமானால், சமீப காலத்தில் நடக்கும் விவாகரத்துப் போன்ற சீர்கேடுகளைத் தவிர்த்து விடலாம். இரட்சிக்கப்படாத கணவன்மார்களையுடைய சகோதரிகளுக்கு வேதத்தில் உள்ள மிகப்பெரிய ஆறுதல் அளிக்கும் வாக்குத்தத்தம் 1பேதுரு 3:1,2 வசனங்கள் ஆகும். “திருவசனத்திற்கு கீழ்படியாதவர்களாக இருந்தால், பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக் கொள்ளப்படுவார்கள்''. இதன்படி நடந்து இதை உரிமை பாராட்டி, கணவன்மார்களை ஆதாயப்படுத்திக்கொள்ள முடியும். பிள்ளைகள் எல்லாக் காரியத்திலேயும் பெற்றோருக்குக் கீழ்படிந்திருக்க வேண்டும். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் திடனற்றுப் போகாதபடி அவர்களுக்குக் கோபமூட்டாதிருக்க வேண்டும் (கொலோசெயர் 3:20,21). Actions speak louder than words. ஆகவே பிள்ளைகளுக்கு தெய்வபயத்தை போதிக்கிற பெற்றோர்கள், எல்லாவற்றிலேயும் மாதிரிகளாகவும் நடந்து காண்பிக்க வேண்டும். இல்லாவிட்டால், விசேஷமாக இந்த தலைமுறைப் பிள்ளைகளை ஆதாயமாக்கிக் கொள்வது கடினமாக உள்ளது. கணவன், மனைவி, பிள்ளைகள் இப்படி கர்த்தர் கற்பித்திருக்கும் ஒழுங்குகளின்படி நடக்கும்போது, குடும்பத்தில் ஐக்கியமுண்டாகும்.

## சபையில் ஐக்கியம்

சபை என்பது கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறது "நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்" என்று 1கொரிந்தியர் 12:27ல் வாசிக்கிறோம். அதே அதிகாரம் 12 முதல் 14 வசனங்களை வாசிக்கும்போது, சபையாகிய சரீரத்திற்கு கிறிஸ்து தலையாயிருக்கிறார். நாம் சரீரமாயிருக்கிறோம். ஒரு சரீரத்தில் பல அவயங்கள் இருப்பதுபோல, நாமும் வெவ்வேறு அவயவங்களாக இருக்கிறோம். சில முக்கியமான அவயவங்கள் மறைந்திருந்து வேலை செய்கின்றன. உதாரணமாக, இருதயம், நுரையீரல், சிறுநீரகம் போன்ற ராஜ உறுப்புகள் மறைந்திருந்து இடைவிடாமல் செயல்பட்டுக் கொண்டே இருக்கின்றன. சில உறுப்புகள் வெளியில் தெரியும் வண்ணம் இருக்கின்றன. பெரிய உறுப்போ சிறிய உறுப்போ, எல்லாமே ஒரே சரீரத்தின் அவயவங்கள். எல்லாம் ஒரே ரத்தத்தினால் ஒரே தலையின்கீழ் செயல்படுவதினால் வித்தியாசம் இல்லை. ஆனால், எல்லா உறுப்பும் இணைந்து செயல்பட்டால்தான், சரீரம் ஆரோக்கியமானதாக இருக்கும். ஒரு உறுப்பு மற்ற உறுப்போடு இணைந்து செயல்படவில்லையென்றால், சரீரம் செயலிழந்து போய் விடும். அந்தந்த உறுப்புகள் தங்கள் தங்கள் வேலைகளை சரியாக செயல்பட வேண்டும். கண்ணுக்குத் தேவையான கண்ணாடியை "ஏன் என்மேல் வைத்து தழும்புண்டாக்குகிறாய்" என்று மூக்கு கோபித்துக் கொள்ளுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். கண்ணாடி போடாமல் நடந்தால், சரீரம் எங்காவது மோதிக்கொள்ளும்போது, முதலில் அடிவாங்குவது மூக்காகத்தான் இருக்கும். காலில் முள் தைக்கும்போதும், மூளையின் கட்டளையை ஏற்று, கை உடனே சென்று, முள்ளைப் பிடுங்கி எடுக்க வேண்டும். இப்படியே, உறுப்புகள் இணைந்து செயல்பட வேண்டும். நம்மில் ஒருவனும் தனக்கென்று பிழைக்கிறதுமில்லை, ஒருவனும் தனக்கென்று மரிக்கிறதுமில்லை (ரோமர் 14:7).

சரீரமாகிய சபையிலும் நாம் என்னவாக இருக்கிறோம் என்று அறிந்து, அதின்படி செயல்படும்போது, சபை வளர்ச்சி அடைகிறது. "நமக்கு ஒரே சரீரத்தில் அநேக அவயவங்கள் இருந்தும், எல்லா அவயவத்திற்கும் ஒரே தொழில் இராதது போல, அநேகராயிருக்கிற நாமும் ...நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்கள் உள்ளவர்கள் ஆனபடியினாலே, நம்மில் தீர்க்கதரிசனம் சொல்லுகிற வரத்தை உடையவன்...ஊழியம்செய்கிறவன்...போதிக்கிறவன்...புத்தி சொல்லுகிறவன்... பகிர்ந்து கொடுக்கிறவன்... முதலாளியானவன்... இரக்கஞ்செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன்" (ரோமர் 12:4-18). தேவன் நமக்குப் பகிர்ந்தளித்த வேலையை செய்கிறதுமன்றி மற்ற அவயவங்களாகிய நம் சகோதரரோடு இணக்கமாயிருந்து குற்றப்படுத்தாமல் (ரோமர் 14:10), சமாதானக் கட்டினால், ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும் (எபேசியர் 4:4-7). நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறபடியால், பொய்யைக் களைந்து அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன். கோபங்கொண்டாலும் பாவம் செய்யக் கூடாதென்றும், பிசாசிற்கு இடங்கொடாமலும் இருக்க வேண்டுமென்று வாசிக்கிறோம். திருடாமல், நலமான வேலை செய்து, குறைச்சலுள்ளவனுக்கு கொடுக்க வேண்டுமென்றும் பார்க்கிறோம். கெட்ட வார்த்தை பேசக்கூடாது. பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தைகளானாலும் கேட்கிறவர்களுக்கு பிரயோஜனம் உண்டாகும்படி பேசவேண்டும். பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தக் கூடாது. சகலவித கசப்பையும், கோபத்தையும், மூர்க்கத்தையும், கூக்குரலையும், தூஷணத்தையும் மற்ற எந்த துர்க்குணத்தையும் நீக்கிவிட வேண்டும். ஒருவருக்கொருவர் தயவாயும் மன

உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல நீங்களும் ஒருவரை ஒருவர் மன்னிக்க வேண்டுமென்று அப்போஸ்தலனாகிய பவுல் சபையின் அவயவங்கள் செயல்படுவதைக் குறித்து எபேசியர் 4:25-32ல் எழுதி வைத்திருக்கிறார். சபையின் எல்லா ஆராதனை மற்றும் ஜெபங்களில் கலந்து கொள்வது மட்டுமல்லாமல், சிறு குழுக்களிலும் ஜெபக்குழுக்களிலும் இணைந்து, மேற்கூறிய ஆலோசனைகளின்படி நடந்தால், சபைகளில் எழுப்புதல் உண்டாகி, திரளான ஆத்துமாக்கள் சேர்க்கப்படுவார்கள்.

தேவப்பிள்ளைகளாகிய நாம், இப்படி ஒருவரோடொருவரும், குடும்பத்தில் உள்ளவர்களோடும், சபையில் உள்ள மற்ற அவயவங்களோடும் ஐக்கியமாயிருந்து தேவனுடைய சீஷர்களாக அவருடைய மகிமைக்காக வாழ்ந்து, அவருடைய ராஜ்யத்தைக் கட்டி, அவரின் வருகைக்கு ஆயத்தப்படுவோம்!

---

6-ம் பக்க தொடர்ச்சி

**இந்த 16 ஜெப போதனைகளின் அடிப்படையில் கீழ்கண்ட கேள்விகளை உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளும்படி உங்களை உற்சாகப்படுத்துகின்றேன்**

1. நான் ஜெபிக்கின்றேனா?
2. என் எதிராளிகளுக்காக ஜெபிக்கின்றேனா?
3. தனித்திருந்து ஜெபிக்கின்றேனா?
4. குறிப்பாக ஜெபிக்கின்றேனா?
5. விடாமுயற்சியுடன் ஜெபிக்கின்றேனா?
6. அறுவடைக்குத் தேவையான ஆட்களுக்காக ஜெபிக்கின்றேனா? சபையில் வேலை செய்பவர்களுக்காக ஜெபிக்கின்றேனா? எதிர்காலத்தில் கிறிஸ்துவுக்காக ஊழியம் செய்பவர்கள் எழும்ப ஜெபிக்கின்றேனா?
7. நான் ஜெபத்தினால் ஜெயம் பெறுகின்றேனா?
8. மற்றவர்களோடு ஒற்றுமையாய் ஜெபிக்கின்றேனா?
9. உண்மையுடனும், தாழ்மையுடனும் ஜெபிக்கின்றேனா?
10. ஆராதிக்கும் ஸ்தலத்திலே ஜெபிக்கின்றேனா? ஜெபிக்கும் நோக்கத்தோடு சபைக்கு வருகின்றேனா?
11. விசுவாசத்தோடு ஜெபிக்கின்றேனா?
12. மன்னிக்கும் குணத்தோடு ஜெபிக்கின்றேனா? நான் பரிசுத்தமுள்ளவனாய் இருக்கின்றேனா? நான் மன்னிக்க வேண்டிய நபர் யாரேனும் இருக்கின்றனரா?
13. நீதியுள்ளவனாய் ஜெபிக்கின்றேனா?
14. ஆபத்துக் காலத்தை எதிர்கொள்ள ஜெபிக்கின்றேனா?
15. இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கின்றேனா?
16. சோதனையைத் தவிர்ப்பதற்கு ஜெபிக்கின்றேனா?

புதிய ஏற்பாட்டில் இன்னும் அதிக போதனைகளும் உண்டு. இது ஒரு ஆரம்பமே

**தேவனே! ஜெபிக்க எங்களுக்குக் கற்றுத்தாரும்!**

எழுதியவர் : **ஜார்ஜ் உட்**
முன்னாள் தலைவர் - அகில உலக ஏ.ஜி.சபைகள்
(மொழியாக்கம் செய்யப்பட்டது)

---



# இயேசு கிறிஸ்துவின் வருகையும், உலக முடிவும் அதிசீக்கிரம்

Rev. P.S. ராஜமணி
இயக்குநர் - அகில இந்திய விஷன் 2020

**நிறைவேறிக்கொண்டிருக்கும் தீர்க்கதரிசனங்கள் பாகம் :2** (... தொடர்ச்சி)

**5. பூமியதிர்ச்சிகள் :** மத்தேயு 24:7ல் பூமியதிர்ச்சிகள் பல இடங்களில் உண்டாகும் என்று முன்னுரைக்கப்பட்டது. கீழேயுள்ள அட்டவணையைப் பார்த்தால் இது தெளிவாக விளங்கும். நாம் வாழும் இந்த 21ம் நூற்றாண்டில் அடிக்கடி பூமியதிர்ச்சிகளைப் பற்றிய செய்திகளை வாசிக்கின்றோம்.

பூமியதிர்ச்சிகளில் குறிப்பிடத்தக்கவை

| ஆண்டு | இடம் | ரிக்டர் அளவு | பலியானவர் |
|---|---|---|---|
| 856 | கொரிந்த், கிரீஸ் | - | 45,000 |
| 1556 | சென்சி, சீனா | - | 8,30,000 |
| 1737 | கல்கத்தா | - | 3,00,000 |
| 1755 | லிஸ்பான் | - | 60,000 |
| 1883 | துட்ச் இன்டிஸ் | - | 36,000 |
| 1902 | மார்டினிகியூ | - | 40,000 |
| 1906 | சான்பிரான்சிஸ்கோ | 8.3 | 700 |
| 1908 | மெசினா, இத்தாலி | 7.5 | 1,00,000 |
| 1915 | இத்தாலி | - | 29,900 |
| 1920 | சீனா | - | 1,80,000 |
| 1923 | ஜப்பான் | 8.3 | 1,43,000 |
| 1927 | சீனா | 8.3 | 2,00,000 |
| 1932 | சீனா | - | 70,000 |
| 1933 | ஜப்பான் | 8.1 | 3,064 |
| 1934 | இந்தியா | | 10,000 |
| 1935 | இந்தியா | 7.6 | 30,000 |
| 1939 | சிலி | | 30,000 |
| 1939 | துருக்கி | 8.0 | 30,000 |
| 1944 | ஜப்பான் | 7.9 | 1,000 |
| 1946 | ஜப்பான் | 8.0 | 1,330 |
| 1948 | ஜப்பான் | 7.1 | 3,796 |
| 1949 | எகுடோர் | - | 6,000 |
| 1960 | சிலி | - | 5,700 |
| 1960 | மொராக்கோ | - | 12,000 |
| 1962 | ஈரான் | - | 10,000 |
| 1964 | அலாஸ்கா | 8.4 | 114 |
| 1968 | ஈரான் | - | 11,500 |
| 1970 | பெரு | 7.8 | 66,700 |
| 1972 | ஈரான் | 7.9 | 5,000 |

| ஆண்டு | இடம் | ரிக்டர் அளவு | பலியானவர் |
|---|---|---|---|
| 1972 | நிகாரகுவா | - | 10,000 |
| 1974 | பாகிஸ்தான் | - | 5,200 |
| 1976 | குவாத்மலா | - | 23,000 |
| 1976 | சீனா | 8.0 | 25,500 |
| 1976 | பிலிப்பைன்ஸ் | - | 3,300 |
| 1976 | துருக்கி | - | 3,700 |
| 1978 | ஈரான் | - | 25,000 |
| 1980 | அல்ஜீரியா | 7.5 | 20,000 |
| 1980 | இத்தாலி | 6.8 | 3,000 |
| 1987 | ஜப்பான் | 6.6 | 60,000 (Homes) |
| 1988 | அர்மேனியா | - | 25,000 |
| 1990 | ஈரான் | - | 40,000 |
| 1990 | பிலிப்பைன்ஸ் | - | 1,641 |
| 1991 | ஆப்கானிஸ்தான் | - | 1,500 |
| 1991 | இந்தியா | - | 1500 |
| 1992 | இந்தோனேசியா | - | 2,000 |
| 1992 | எகிப்து | - | 552 |
| 1992 | துருக்கி | - | 653 |
| 1993 | இந்தியா | 6.4 | 30,000 |
| 1994 | கொலம்பியா | - | 600 |
| 1995 | ஜப்பான் (கோஃபி) | 6.9 | 5,500 |
| 1995 | ரஷ்யா | - | 1,841 |
| 1997 | ஈரான் | - | 2,000 |
| 1997 | ஈரான் | - | 1,100 |
| 1998 | ஆப்கானிஸ்தான் | 6.9 | 5,000 |
| 1998 | ஆப்கானிஸ்தான் | - | 3,500 |
| 1998 | பாப்போ நியூ கென்யா | - | 2,123 |
| 1999 | கொலம்பியா | 6 | 450 |
| 1999 | இந்தியா | 6.8 | 110 |
| 1999 | துருக்கி | 7.4 | 40,000 (Exceed) |
| 2001 | குஜராத், இந்தியா | 7.9 | 30,000 |
| 2004 | சுமுத்ரா, இந்தோனேசியா | 9.1 | 2,28,000 |
| 2005 | பாகிஸ்தான் | 7.6 | 1,00,000 |
| 2008 | பாகிஸ்தான் | 7.6 | 80,360 |
| 2008 | சீனா | 7.9 | 87,587 |
| 2010 | ஹெய்ட்டி | 7.0 | 2,00,000 |

**2011 மார்ச் – ஜப்பான் :** 2011 மார்ச் 11ம் தேதி ரிக்டர் அளவில் 9.0 என்ற பயங்கர நிலையில் ஜப்பானில் பூகம்பம் ஏற்பட்டது. சுனாமி 33 அடி உயரத்திற்கு கடல் அலையாக எழும்பி சின்னாபின்னமாக்கியது. ஊருக்குள்ளே 11 கிலோ மீட்டர் தூரத்திற்கு தண்ணீர் புரண்டு வந்தது. டோக்கியோவிலிருந்து சுமார் 380 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள இடங்களை சேதப்படுத்தியது. 800 கிலோ மீட்டர் வேகத்தில் வெள்ளம் பாய்ந்து ஓடியது. சுமார் 28,000 மக்கள் மாண்டனர். 4,50,000 பேர் வீடு இழந்தனர்.

**துருக்கி:** 2011ல் துருக்கியில் இரண்டு தடவை பூமியதிர்ச்சி ஏற்பட்டு பெரிய அழிவை கொண்டு வந்தது.

தொடரும்...

## உங்களைப் பற்றிய சாட்சி என்ன?

**ஆபிரகாம்** : தேவனுக்கு பயப்படுகிறவன் (ஆதி.22:12). தேவனுடைய சிநேகிதன் (ஏசாயா 41:8). விசுவாசிகளின் தகப்பன் (ரோமர் 4:12).

**மோசே** : பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்த குணமுள்ளவன் (எண்.12:3). தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவன் (எண்.12:7).

**யோபு** : உத்தமன், சன்மார்க்கன், தேவனுக்கு பயப்படுகிறவன், பொல்லாப்புக்கு விலகுகிறவன் (யோபு 1:1).

**எலியா** : பரிசுத்தவான் (2 இராஜா.4:9). தேவனுடைய மனுஷன் (1 இராஜா.17:24). கருத்தாய் ஜெபிக்கிறவன் (யாக்.5:17).

**எஸ்றா** : தேறின வேதபாரகன், இருதயத்தை பக்குவப்படுத்தியவன் (எஸ்றா 7:10,11).

**தாவீது** : தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவன் (1 சாமு.13:14; 16:7).

**சாமுவேல்** : கர்த்தர் சவுலை ராஜாவாக்கியதற்கு மனஸ்தாபப்பட்டபோது, அதை நினைத்து சாமுவேல் மனம் நொந்து, இராமுழுவதும் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார். அவர் அநியாயம் செய்யவும் இல்லை. இடுக்கண் செய்யவுமில்லை; பரிதானம் வாங்கவும் இல்லை (1 சாமுவேல் 15:11; 12:1-4)

**மரியாள்** : தன்னைவிட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்துகொண்டவள் (லூக்கா 10:38-42).

**நாத்தான்வேல்**: கபடமற்ற உத்தம இஸ்ரவேலன் (யோவான் 1:47).

**அப்பொல்லோ** : வேதாகமத்தில் வல்லவன், ஆவியில் அனலுள்ளவன், தைரியமாய் போதிக்கிறவன், சாதுரியவன் (அப்.17:24,25).

**அனனியா** : வேத பிரமாணத்தின்படி பக்தியுள்ளவன், நல்லவன் (அப்.22:12).

**தீமோத்தேயு** ; மாயமற்ற விசுவாசத்தை உடையவன் (2 தீமோ.1:4,5).

**தேமேத்திரியு** : எல்லாராலும் நற்சாட்சி பெற்றவன் (3 யோவான் 1:12).

**காயு** : சத்தியத்தில் நடப்பவன், அன்புள்ளவன், உண்மையுள்ளவன் (3 யோவ.1:1-6)

**எப்பாப்பிரா** : போராடி ஜெபிக்கிறவர் (கொலோ.4:12).

**தீகிக்கு** : உண்மையுள்ள ஊழியன் (கொலோ.4:7; எபே.6:21).

**எப்பாப்பிராதீத்து** : கிறிஸ்துவின் ஊழியத்தின் நிமித்தம் தன் பிராணனையும் எண்ணாதவர் (பிலி.2:25-30).

**யோவான்** : அன்பாயிருந்து சீஷன் (யோவான் 21:20).

**ஆக்கில்லா-பிரிஸ்கில்லா** : பவுலின் பிராணனை காக்க கழுத்தைக் கொடுத்தவர்கள் (ரோமர் 16:3-5).

**சகரியா-எலிசபெத்து** : கர்த்தருடைய சகல கற்பனைகளின்படியும், நியமங்களின்படியும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள் (லூக்கா 1:5,6).

**ஏனோக்** : தேவனுக்கு பிரியமானவன் (எபி.11:5).

**பர்னபா** : அவன் நல்லவனும், பரிசுத்த ஆவியினாலும் விசுவாசத்தினாலும் நிறைந்தவனுமாயிருந்தான் (அப்.11:24).

"நல்லது உண்மையும் உத்தமுமான ஊழியக்காரனே வந்து உன் எஜமானனுடைய சந்தோஷத்தில் மகிழ்ந்திரு" என்ற வார்த்தைகளுக்கு தகுதியாய் வாழ்வோம். சாட்சியைக் காத்துக்கொள்வோம்!.



# ஏசாயா : Isaiah

## புத்தக அறிமுகம்

**Rev. Dr. சாமுவேல் ராஜ் R.**
All India National Director, Global University

வேதாகமத்தில் 66 புத்தகங்கள் இருப்பதுபோல, ஏசாயா புத்தகத்தில் 66 அதிகாரங்கள் உள்ளன. அதிலுள்ள முதல் 39 அதிகாரங்களும் பொதுவாக தேவனுடைய நியாயத்தீர்ப்பில் கவனம் செலுத்தி பழைய ஏற்பாட்டுக் குரலில் எழுதப்பட்டுள்ளன. கடைசி 27 அதிகாரங்களும் தேவ ஜனங்களுக்கு ஆறுதலையும் நம்பிக்கையையும் தருவதோடு, புதிய ஏற்பாட்டுக் குரலில் நற்செய்தி வடிவிலேயே எழுதப்பட்டுள்ளன. எனவே, ஏசாயா புத்தகத்தை ஒரு **"Mini Bible", சிறிய வேதாகமம்** என்றே கூறலாம்.

### ஏசாயா புத்தகத்தின் ஒட்டுமொத்தப் பார்வை: Overall view of Isaiah

சாலொமோனுடைய மரணத்துக்குப் பின்பு (1இரா.11:43) இஸ்ரவேல் தேசம் வடக்கு, தெற்கு ராஜ்யங்கள் என இரண்டாகப் பிளவுபட்டுவிட்டது. வடக்கு ராஜ்யம் **இஸ்ரவேல்** என்று அழைக்கப்பட்டது. யெரொபெயாம் இதை ஆண்டு வந்தான். தெற்கு ராஜ்யம் **யூதா** என்று அழைக்கப்பட்டது. இதனை சாலொமோனுடைய மகன் ரெகொபெயாம் ஆண்டு வந்தான். இவை கிமு 931-ல் பிளவுற்றன, (1இரா.12ம் அதி). வடக்கு ராஜ்யத்தில் யெரொபெயாம் முதல் (1இரா.12:20) ஓசெயா வரை (2இரா.17:1-18) மொத்தம் 19 ராஜாக்கள் ஆண்டார்கள். கிமு 722ல் அசீரியராஜா வடக்கு ராஜ்யத்தை சிறைப்பிடித்துச் சென்றான். அத்துடன் வடக்கு ராஜ்யமாகிய இஸ்ரவேல் முடிவுக்கு வந்தது.

அதன்பின்பு தெற்கு ராஜ்யம் என்று அழைக்கப்பட்ட யூதா கிமு 586 வரை தொடர்ந்து நிலைத்து நின்றது. சாலொமோனுடைய மகனாகிய ரெகொபெயாம் தொடங்கி (1இரா.12:18,19) கடைசி ராஜாவாகிய சிதேக்கியா வரை (2இரா.25:1-12) மொத்தம் 20 ராஜாக்கள் அதனை ஆண்டு வந்தார்கள். கிமு 586-ல் பாபிலோன் ராஜா அவர்களை மேற்கொண்டு, எருசலேமைச் சுட்டெரித்தும் இடித்தும் அழித்து, மக்களைச் சிறையாகக் கொண்டு சென்றான்.

இந்த பிளவுற்ற இரு ராஜ்யங்களின் சரித்திரத்தை 1இரா.12 முதல் 22 அதிகாரங்களிலும், 2 இராஜாக்கள் 1 முதல் 25 வரையுள்ள அதிகாரங்களிலும், 2 நாளாகமம் 10 முதல் 36 வரையுள்ள அதிகாரங்களிலும் வாசித்தறியலாம்.

இஸ்ரவேல் என்னும் வடக்கு ராஜ்யமும், யூதா என்னும் தெற்கு ராஜ்யமும் தங்களது பாவத்தினாலும், விக்கிரக ஆராதனையினாலும் யெகோவா தேவனுடைய உடன்படிக்கையை மீறி நடந்தனர். வடக்கு ராஜ்யத்தை ஆண்டுவந்த அனைத்து ராஜாக்களும் தேவனுடைய பார்வையில் பொல்லாதவர்களாய் இருந்தனர், (1இரா. 16:25,30; 22:52; 2இரா.3:3; 10:29). யெரொபெயாம், உம்ரி, ஆகாப், அகசியா, யோராம் ஆகியோர் இதற்கு உதாரணங்களாகும்.

தெற்கு ராஜ்யமாகிய யூதாவின் ராஜாக்களும் தேவனுடைய உடன்படிக்கையை மீறி நடந்தனர். எசேக்கியா, யோசியா போன்ற சில ராஜாக்களே கர்த்தருக்குப் பிரியமானதைச் செய்தனர்.

வடக்கு, தெற்கு ஆகிய இரு ராஜ்யங்களும் தாங்கள் நிலைத்து நின்ற காலமெல்லாம் தங்களுக்குள்ளே சண்டையிட்டுக் கொண்டும், தங்களைச் சுற்றியுள்ள புறஜாதிய தேசங்களுடன் போர்செய்து கொண்டுமிருந்தனர்.

அசீரியாவுக்குச் சிறைசென்ற வடக்கு ராஜ்யம் தங்கள் சொந்த தேசத்துக்குத் திரும்பி வரவில்லை. ஆனால், பாபிலோனுக்குச் சிறைசென்ற தெற்கு ராஜ்யமோ கிமு 536-ல் தங்கள் சொந்த தேசத்துக்குத் திரும்பி வந்தனர், (எஸ்றா 1:1-4).

**ஏசாயா புத்தகத்தின் செய்தி:**

அக்கால உலக அரசியலில் கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்தார். அசீரியருக்கு எதிராக பாபிலோனியர் எழும்பி அவர்களை முறியடித்தனர். அதன்பின்பு பாபிலோனியருக்கு எதிராக மேதியரும் பெர்சியரும் கூட்டாக எழும்பி அவர்களை முறியடித்தனர். இந்த உலக அரசியலின் எழுச்சியிலும் வீழ்ச்சியிலும் இஸ்ரவேலர்மேல் தேவன் தமது திட்டத்தை நிறைவேற்றினார்.

ஓங்கியிருந்த வல்லரசுகள் வீழும் காலம் வரும்; தேவன் தமது குமாரனாகிய மேசியாவை தேவன் இவ்வுலகிற்கு இம்மானுவேலாக அனுப்புவார். “இம்மானுவேல்” என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தம். அவர் இஸ்ரவேலருக்குத் துணைநின்று அவர்களுடைய பகைஞர் அனைவரையும் நியாயந்தீர்ப்பார். எல்லா தேசங்களையும் தமது ஆளுகையின்கீழ் கொண்டு வருவார். அந்த மேசியா அநேகருடைய பாவங்களைத் தாமே சுமந்து தீர்ப்பார். தம்மைவிட்டுத் தூரம்போன இஸ்ரவேல் ஜனங்களையும், உலகத்தையும் அவர் நியாயந்தீர்க்கும் நியாயாதிபதியாய் வீற்றிருப்பார்.

தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரப்போகிறது எவ்வளவு நிச்சயமோ, அவ்வளவு நிச்சயமாய் அவருடைய ஆறுதலும் இரக்கங்களும் இஸ்ரவேலுக்கும், முழு உலகத்துக்கும் தேவனுடைய குமாரன் மூலமாக உண்டாகும். மேற்சொன்ன விபரங்களே ஏசாயா புத்தகத்தின் செய்தியாகும்.

**ஏசாயா புத்தகத்தின் பின்னணியம்: Background of Isaiah**

தங்கள் தீர்க்கதரிசன வார்த்தைகளைப் புத்தகமாக எழுதிய 16 தீர்க்கதரிசிகளில் ஏசாயாவும் ஒருவன். இவனது புத்தகம் அளவில் பெரியதாக இருப்பதால் இவன் **பெரிய தீர்க்கதரிசி** என்று அழைக்கப்படுகிறான். பெரிய தீர்க்கதரிசிகள் என அறியப்படும்; ஏசாயா, எரேமியா, எசேக்கியேல், தானியேல் ஆகிய நால்வரில் ஏசாயா முதலாவது வரும் பெரிய தீர்க்கதரிசி ஆவான். மேசியா மூலம் வரும் இரட்சிப்பை மிகத்தெளிவாகக் கூறுவதால், ஏசாயா புத்தகம் **ஐந்தாவது நற்செய்திநூல்** என்றும் அழைக்கப்படுகிறது.

தம்முடைய ஜனங்களுக்குத் தாம் சொல்ல விரும்பிய தமது செய்தியை தேவன் தமது தீர்க்கதரிசிகள் மூலம் அறிவித்தார். இந்தத் தீர்க்கதரிசிகள் பரிசுத்த ஆவியால் ஏவப்பட்டு தேவனுடைய சார்பில் பேசினர்.

**தீர்க்கதரிசியாகிய ஏசாயா:**

எருசலேமின் வீழ்ச்சி பற்றிய தீர்க்கதரிசனச் செய்தியை எருசலேமின் அழிவுக்கு முன்பாகவே சொன்ன தீர்க்கதரிசி ஏசாயாதான். ஆனால் அவனோ எருசலேமின் வீழ்ச்சியைக் காணவில்லை. மாறாக, எரேமியா, எசேக்கியேல் போன்றோர்; எருசலேமின் அழிவைப்பற்றி தீர்க்கதரிசனம் உரைத்தனர்; தங்கள் வாழ்நாள் காலத்திலேயே அதன் வீழ்ச்சியைக் கண்டனர். ஏசாயா நீண்டதூர காலத்துக்குரிய சம்பவங்களைத் தன் அகக்கண்களில் கண்டு அதைத்

தீர்க்கதரிசனமாக உரைத்தான். அதன் நிறைவேறுதல்களான யூதாவின் சிறையிருப்பையோ, அவர்கள் திரும்பி வருவதையோ தன் வாழ்நாள் காலத்தில் ஏசாயா காணவில்லை. ஏசாயாவுக்குப் பின்வந்த தீர்க்கதரிசிகளெல்லாம் ஏசாயா இஸ்ரவேல் ஜனங்களைப் பற்றிச் சொல்லிய செய்திகளைப் பின்னோக்கிப்பார்த்து அவற்றை ஆதாரமாகக் கொண்டு தங்கள் செய்திகளைச் சொன்னார்கள் எனலாம்.

தெற்கு ராஜ்யத்தை ஆண்டுவந்த உசியா, யோதாம், ஆமோஸ், எசேக்கியா ஆகிய ராஜாக்களோடு ஏசாயா தனிப்பட்டத் தொடர்பிலிருந்தான்,(ஏசாயா 1:1). எனவே இராஜாக்கள் புத்தகத்திலும் நாளாகமப் புத்தகத்திலும் வரும் சம்பவங்கள் ஏசாயா புத்தகத்திலும் வருகிறது (2இரா.18,19,20; 2நாளா.29,30,31,32). 2ம் யெரொபெயாம், பெக்காகியா, பெக்கா, ஓசெயா ஆகியோர் ஏசாயா காலத்தில் வடக்கு இராஜ்யத்தில் ஆட்சி செய்தனர். தீர்க்கதரிசியாயிருந்தாலும் ஏசாயா பெரிய அரசியல் மேதையாய் காணப்பட்டான்.

ஏசாயா பிரதானமாகத் தெற்கு ராஜ்யத்துக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தான். தோராயமாக 50 ஆண்டுகள் (கிமு 760 முதல் 680 வரை) தீர்க்கதரிசியாக ஊழியம் செய்தான். எபிரெயப் பாரம்பரியத்தின்படி, எசேக்கியாவின் குமாரனாகிய மனாசே என்னும் பொல்லாத ராஜாவின் விக்கிரக ஆராதனையை ஏசாயா கண்டித்ததால் கிமு 680ல் வாளால் அறுப்புண்டு கொலைசெய்யப்பட்டான் (எபி.11:37) என அறிகிறோம். இவன் திருமணமானவன். அவன் மனைவியும் ஒரு தீர்க்கதரிசியே. அவர்களுக்கு இரு புத்திரர் பிறந்தார்கள்; தீர்க்கதரிசன அர்த்தமுள்ளதாக அவர்களுக்குப் பெயரிடப்பட்டது; **சேயார் யாசுப்** = சிறுகூட்டம் திரும்பவரும்.

**மகேர்-சலால்-அஸ்பாஸ்**= கொள்ளையைத் துரிதப்படுத்து, அழிவைத் தீவிரமாக்கு.

தங்கள் தேசத்துக்குச் சம்பவிக்கப்போகிறதை மக்கள் அறியும்படி தங்கள் பிள்ளைகளுக்கு இப்படிப் பேரிட்டார்கள்.

ஆமோஸ், யோனா, ஓசியா, மீகா, ஏசாயா அனைவரும் ஒரே காலத்தில் வாழ்ந்து தீர்க்கதரிசனம் உரைத்தார்கள். ஓசியா, ஆமோஸ், யோனா ஆகியோர் வடக்கு ராஜ்யத்துக்கும், மீகா வடக்கு மற்றும் தெற்கு ராஜ்யங்களுக்கும், ஏசாயா பிரதானமாக தெற்கு ராஜ்யத்துக்கும் தீர்க்கதரிசனம் உரைத்தனர். ஓசியா தேவனுடைய அன்பையும், ஆமோஸ் அவருடைய நீதியையும், ஏசாயாவோ தேவனுடைய பரிசுத்தத்தையும் வலியுறுத்திப் பேசினான்.

இவர்களது ஊழிய காலத்தில் அசீரிய சாம்ராஜ்யம் தனது எல்லைகளை விரிவடையச் செய்ய அண்டை நாடுகளுடன் படையெடுத்து வந்தது; இஸ்ரவேலும் யூதாவும் அவர்களது பிரதான இலக்காக இருந்தன. அதே சமயம் இவ்விரு தேசங்களும் மார்க்கக் காரியங்களிலும், கர்த்தருடைய உடன்படிக்கையினின்றும் கர்த்தரைவிட்டு விலகிச் சென்றனர்.

அசீரிய மன்னர்களைச் சார்ந்திராதே என ஏசாயா ஆகாஸ் ராஜாவுக்கு ஆலோசனை சொன்னான்; வடக்கு ராஜ்யத்தை அசீரியா சிறைப்பிடித்துச் சென்ற பின்பு, அசீரியாவை மேற்கொள்ள பிற அண்டை நாடுகளுடன் கூட்டுச்சேர வேண்டாம் என்றும் எசேக்கியா ராஜாவுக்கு ஏசாயா ஆலோசனை தந்தான். கர்த்தரிலேயே தங்கள் நம்பிக்கையை வைக்கும்படியும் சொன்னான்.

**ஏசாயா புத்தகம் எதற்காக எழுதப்பட்டது?** மூன்று காரணங்களைக் கூறலாம்:

1. இஸ்ரவேல் தேசத்தையும், யூதா ஜனங்களையும், புறஜாதிய தேசங்களையும் தங்கள் தங்கள் பாவத்தைவிட்டு வெளியே வந்து, வரவிருக்கும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்குப் பயப்படும்படி தீர்க்கதரிசனம் உரைத்தான்.

2. சிறையாகக் கொண்டு செல்லப்படும் யூத ஜனங்கள் திரும்பி வருவார்கள் என்றும், தங்களைச் சுற்றியுள்ள புறஜாதிய மக்களுக்கு கர்த்தரை அறிவிக்க வெளிச்சமாயிருப்பார் என்று அறிவித்தான்.

3. மேசியா வருவார் என்றும் அவரது இரட்சிப்பு முழு உலகுக்கும் கிடைக்கும் என்றும், பழைய புதிய உடன்படிக்கை மக்கள் அனைவருக்கும் நம்பிக்கைதரும் இரட்சிப்பாக இருக்கும் என்றும் அறிவித்தான்.

**ஏசாயா புத்தகத்தின் பொருளடக்கம்:**

ஏசாயா புத்தகத்தின் இருபெரும்பகுதிகள்:

**முதல் பகுதி 1 முதல் 39 வரையிலுள்ள அதிகாரங்கள்:** இதை இடித்துரைக்கும் பகுதி என்பர். ஏசாயா தனது பேனாவை நெருப்பில் முக்கி எழுதினானோ என எண்ணும் அளவிற்கு மிகவும் காட்டமாக தீர்க்கதரிசனம் உரைத்தான். மேசியா வரும்போது அவர் தேசங்களை சமாதானத்தோடும் நீதியோடும் அரசாளுவார் என்ற வார்த்தைகளை ஏசாயாவைப்போல் வேறு எந்தத் தீர்க்கதரிசியும் எடுத்துரைக்க வில்லை; இப்பகுதியை நான்கு பிரிவாகப் பிரித்துக் காணலாம்.

- **அதி 1-12:** யூதாவின் விக்கிரக ஆராதனையும் ஒழுக்கக்கேடான வாழ்க்கையும், சமூக அநீதிகளும் கண்டித்துரைக்கப்படுதல். அத்துடன் மேசியாவின் வருகைப்பற்றிய தீர்க்கதரிசனங்களும் கலந்துள்ளன. ஏசாயாவின் ஊழிய அழைப்பும் இப்பகுதியில் விவரிக்கப்பட்டுள்ளது, (அதி 6).

- **அதி 13-23**: யூதா தேசத்தை அடுத்து வாழ்ந்து வந்த புறஜாதியாரின் பாவங்கள் குறித்தும், அதற்காக கர்த்தரிடமிருந்துவரும் நியாயத்தீர்ப்புக் குறித்தும் இப்பகுதியில் விவரிக்கிறான்.

- **அதி 24-35**: மிக நீண்டத்தூர எதிர்காலத்துக்குரிய பல்வேறு வாக்குத்தத்தத் தீர்க்கதரிசனங்களும், கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக் குறித்த செய்திகளும் இதிலடங்கும்.

- **அதி 36-39**: 2இராஜாக்கள் 18:13-20:21 வரையுள்ள பகுதியில் காணப்படும் எசேக்கியா ராஜாவின் வாழ்க்கைப் பற்றிய குறிப்பிட்ட விபரங்கள் இப்பகுதியில் எடுத்தெழுதப்பட்டுள்ளது.

**இரண்டாம் பகுதி: 40 முதல் 66 வரையுள்ள அதிகாரங்கள்:** முதல்பகுதியில் யூதாவின் பாவத்தைக் குறித்து இடித்துரைத்தத் தீர்க்கதரிசி, இந்த இரண்டாம் பகுதியில் ஆறுதலான வார்த்தைகளைப் பேசுகிறான். தேவனுடைய மகத்துவம் மற்றும் அவருடைய மீட்பின் திட்டம் குறித்தத் தெளிவான தீர்க்கதரிசனங்களை இப்பகுதியில் பார்க்கிறோம். ஆறுதல் பகுதியாகிய இந்த அதிகாரங்களில் தேவன் அற்புதமாய் அவர்களைச் சிறையிருப்பிலிருந்து திருப்பிக் கொண்டுவந்து மறுசீரமைப்புச்செய்து நல்வாழ்வு தருகிற தெளிவான தீர்க்கதரிசனங்களைக் காண்கிறோம்.

பாடுபடும் திருத்தொண்டராக மேசியாவின் பிறப்பு, வளர்ச்சி, பாடுகள், ஆத்தும மீட்பின் செயல்கள் ஆகியவற்றை 53ம் அதிகாரத்தில் விவரிக்கிற தீர்க்கதரிசி, மேசியாவாகிய கிறிஸ்துவால் முழு உலகத்துக்கும் வரும் நீதியின் வெளிச்சத்தைப் பற்றியும் தீர்க்கதரிசனம் உரைக்கிறான்.

**ஏசாயாவில் கிறிஸ்து:**

“மேசியாவை வாக்குத்தத்த நிறைவேறுதலாகவும் (7:14), தேவ ஆவியைப் பெற்றவராகவும் (42:1), பாடுபடும் திருத்தொண்டராகவும் (53 அதி) ஏசாயா சித்தரிக்கிறான்.

ஏசாயா 53ம் அதிகாரத்தில் பாடுபடும் மேசியாவைப் பற்றி ஏசாயா கூறும் அத்தனையும் மேசியாவாகிய இயேசுவின்மேல் அப்படியே நிறைவேறுகிறதைப் பார்க்கிறோம். பேதுருவும் தனது நிருபத்தில் (1பேதுரு 2:24) மேசியாவின் பாடுகளைக் குறிப்பிடும்போது ஏசாயாவின் தீர்க்கதரிசனச் செய்தியைத்தான் பிரதிபலிக்கிறான்.

இரட்சிப்பைக் குறித்து பவுல் ரோமர் நிருபத்தில் விபரமாய் எழுதுகையில் ஏசாயா தீர்க்கதரிசியை அதிகமாய் மேற்கோள்காட்டி எழுதுகிறார்.

பாவத்தினிமித்தம் கெட்டழிந்துபோன உலகத்தில் வாழும் நமக்குப் பாடுகளும் சோதனைகளும் உண்டு. அவ்வித சோதனையில் கிறிஸ்துவைப்போல தாழ்மையுடனும், பொறுமையுடனும், சகிப்புத்தன்மையுடனும், ஏசாயா விவரிக்கும் மேசியாவின் மாதிரியையே பின்பற்றுவோமாக. ஒருநாள் முடிவு வரும்; அன்று நமது இரட்சகரை முகமுகமாய்க் காணுவோம். அவர் வருவார்; 1000 ஆண்டு அவருடன் ஆளுவோம். நியாயத்தீர்ப்பின் ஆக்கினைக்குத் தப்புவோம் என்று ஏசாயா உரைக்கும் தீர்க்கதரிசனச் செய்திகளை ஆராய்ந்து அகமகிழக் கர்த்தர் நமக்குக் கிருபைத் தருவாராக!.

---

## HOW TO PREPARE FOR THE COMING OF JESUS?
## இயேசுவின் வருகைக்கு ஆயத்தப்படுவது எப்படி?

மத்தேயு 24:44; 25:10; வெளி.19:7

1. **PURIFY YOURSELF**
   பரிசுத்தராயிருங்கள்
   யூதா 23; 1 யோவான் 3:2,3; 2 பேதுரு 3:14; வெளி. 22:11

2. **PRAY WITH WATCHFULNESS**
   ஜெபம்பண்ண ஜாக்கிரதையாயிருங்கள்
   யூதா 20; 1 பேதுரு 4:7; லூக்கா 21:36

3. **PRACTISE CHRISTIAN LOVE**
   கிறிஸ்துவின் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்
   யூதா 21; மத்தேயு 25:32-45; 24:12; 2 தீமோ.3:3

4. **PROCLAIM THE GOSPEL**
   சுவிசேஷத்தை அறிவியுங்கள்
   யூதா 22; 2 தீமோ.4:1,2; 2 பேதுரு 3:9; மத்.24:14

5. **PERSEVERE IN FAITH**
   விசுவாசத்தில் உறுதியாயிருங்கள்
   லூக்கா 18:8; யூதா 20; 1 பேதுரு 5:9; 1 தீமோ.4:1





# செழிப்பு ஓநாய்களுக்கு ஜாக்கிரதை!


## Rev.R.மதன்ராஜ்

ஆசிரியர், மெட்ராஸ் ஏ.ஜி. வேதாகமக் கல்லூரி

Contributing Editor, Paripoorana Jeevan


"செழிப்பு உபதேசம் உண்மையென்றால், கிருபை பிரயோஜனமற்றதாகவும், தேவன் நமக்கு தூரமாகவும் தெரிவார்; நமக்கு தேவைப்படும்போது பணத்தையும் செழிப்பையும் கொடுக்கும் ஏ.டி.எம் எந்திரமாகவே தேவன் கருதப்படுவார்" என்று ராப் வெஸ்ட் குறிப்பிடுகிறார். செழிப்பு உபதேசம் வேதத்திற்கு முற்றிலும் புறம்பானது. வளர்ந்த நகரங்களில் இந்த போதனையின் தாக்கம் அதிகமாய் காணப்படுகிறது. இன்று ஆவிக்குரிய திருச்சபைகளையும் இந்த போதனை வெகுவாய் பாதிப்பிற்குள்ளாக்கியிருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது. செழிப்பு உபதேசியாளர்கள், சில குறிப்பிட்ட வேதப்பகுதிகளை தவறாய் வியாக்கியானம் செய்து (உபா.28:1-14; கலா.3:14; 3 யோவான் 2; 2 கொரி.8:9), தங்களுடைய போதனைக்கு சாதகமாய் பயன்படுத்தி, தங்களின் கருத்தை பலமாய் வலியுறுத்துகின்றனர். செழிப்பு உபதேசத்தின் மூன்று அடிப்படை பிழைகளும் அதற்கான சரியான வேதாகம பார்வையும் இக்கட்டுரையில் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது.

**பிழை#1:** இயேசுவின் இரத்தம் பாவத்திலிருந்து மட்டுமல்ல, ஏழ்மையிலிருந்தும் வியாதியிலிருந்தும் நம்மை விடுதலையாக்கியிருக்கிறது. நாம் இரட்சிப்பின் மூலம் ஐசுவரியவானாய் செழிப்பை அனுபவித்து வாழ்வதே தேவனுடைய சித்தம். ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தமும் செழிப்பையே மையப்படுத்துகிறது. ஆகையால், இயேசுவின் இரத்தம் நம்மை வறுமையிலிருந்தும் வியாதியிலிருந்தும் மீட்டிருக்கிறது என்பது இவர்களுடைய முக்கியமான போதனை. அதாவது, ஆதாம் பாவம் செய்ததின் விளைவாகவே இந்த தரித்திர நிலை ஏற்பட்டது. இயேசுவின் இரத்தம் பாவத்தை கழுவியது நிஜமெனின், அந்த பாவத்தின் விளைவாய் தோன்றிய தரித்திரம் மற்றும் வியாதியையும் மாற்றிவிட்டது என்று நம்புகின்றனர். இவர்களின் நம்பிக்கையின் பிரகாரம், இரட்சிக்கப்பட்ட ஒருவர் ஏழ்மையிலும் வியாதியிலும் இருப்பது முரண்பாடான ஒன்று. ஏழ்மையும் வியாதியும் அவர்களின் பாவ நிலைமையையே சுட்டிக்காண்பிக்கிறது என்று வெகுவாய் வலியுறுத்துகின்றனர். வியாதியை இயல்பான சரீரப் பிரச்சனையாய் அணுகாமல், பாவத்தின் விளைவாகவே குற்றஞ்சாட்டு கின்றனர்.

**வேதாகமப் பார்வை:** இரட்சிக்கப்பட்டும் ஏழ்மையிலும் பெலவீனத்திலும் இருக்கும் விசுவாசிகளுக்கு குற்ற உணர்ச்சியை ஏற்படுத்தும் விதத்தில் இந்த போதனை அமைகிறது. ஐசுவரியமோ வறுமையோ, அது ஒருவருடைய பொருளாதார நிலைமை. அதை வைத்து ஒருவருடைய பரிசுத்தத்தை அளவிடுவது வேதத்திற்கு புறம்பானது. வறுமை என்பது மாற்றப்படவேண்டிய ஒரு சமுதாய நிலைமை என்பது மறுக்கமுடியாது. தேவனால் அதை நிச்சயமாய் மாற்றமுடியும் என்பதும் மறுப்பதற்கில்லை. ஆனால் பூமிக்குரிய ஆசீர்வாதங்களை முக்கியத்துவப்படுத்தி, ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை இரண்டாம்பட்சமாக்கும் செழிப்பின் போதனை ஏற்புடையது அல்ல. "செழிப்பை அடையும் குறிக்கோளோடு வாழும் வாழ்க்கை கிறிஸ்தவத்திற்கு முற்றிலும் புறம்பானது" என்று சார்லஸ் ஸ்பர்ஜன் குறிப்பிடுகிறார்.

**பிழை # 2:** நாம் தேவனிடத்திலிருந்து ஐசுவரியத்தை பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால், நாம் அவருக்கு அதிகம் கொடுக்கவேண்டும். அதிகம் கொடுப்பவனே அதிகம் பெற்றுக்கொள்கிறான். நீங்கள் தேவனுக்கு அதிகம் கொடுக்கவில்லையென்றால் அவர் உங்களுக்கு செழிப்பை அருளமாட்டார்.. ஆகையால் கொடுப்பது என்பது செழிப்பை அடையும் தந்திரமான வழி என்று வலியுறுத்துகின்றனர்.

**வேதாகமப் பார்வை:** வேதாகமம் கொடுத்தலை வரவேற்கிறது. மேலும் இந்த போதனை அனைத்து திருச்சபைகளிலும் போதிக்கப்படுகிற ஆரோக்கியமான போதனையே என்பது மறுப்பதற்கில்லை. ஆனால் செழிப்பு உபதேசியாளர்கள் இப்போதனையை கையாளும் விதம் தவறானது. தேவனுக்குக் கொடுத்தால் அவர் பலமடங்கு நமக்கு திருப்பித் தருவார் என்று

கொடுத்தலை ஒரு முதலீடாய் கருதத் தூண்டப்படுகின்றனர். ஒருவர் தேவனுக்கு கொடுப்பது, அவர் அதிகமாய் திருப்பிக் கொடுப்பார் என்ற நோக்கத்தோடல்லாமல், அவர் மீதான அன்பினிமித்தமாகவே இருக்கவேண்டும். பலமடங்காய் திரும்பிப் பெற்றுக்கொள்வோம் என்கிற எதிர்பார்ப்போடே முதலீடு செய்யாமல், தான் இதுவரை பெற்றுக்கொண்ட நன்மையான ஈவுகள் அனைத்தும் தேவனுக்கு சொந்தமானது என்கிற புரிதலோடு மனப்பூர்வமாய் கொடுக்கும் காணிக்கைகளே கர்த்தருக்கு பிரியமானது. இம்மைக்குரிய ஆசீர்வாதங்களில் திருப்தியடைவதை வேதம் வன்மையாய் கண்டிக்கிறது. பணம் தேவனுக்கு பகையல்ல; ஆனால் பண ஆசை எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது. அந்த ஆசையோடு கர்த்தருக்குக் கொடுக்கும் காணிக்கைகளும் தீட்டானவைகளே.

**பிழை#3:** விசுவாசமே செழிப்பை அடைய நமக்குள்ளிருந்து செயல்படும் பெரிய சக்தி. விசுவாசம் இருந்தால் நாம் செழிப்பாய் வாழலாம்; எனவே விசுவாசமே செழிப்பை பெற்றுக்கொள்வதற்கு மனிதனுக்குள்ளிருந்து செயல்படும் ஒரு பெரிய சக்தி என்று இவர்கள் நம்புகின்றனர். விசுவாசத்தோடு நேர்மறையாய் அறிக்கையிட்டு ஜெபித்தால் (Positive Confession), நாம் ஜெபத்தின் பலனை உடனே பெற்றுக்கொள்வோம் என்றும் போதிக்கின்றனர். அந்த வகையில் நம்முடைய விசுவாசத்திற்கு தேவனையே கட்டுப்படுத்தும் வல்லமை இருப்பதாகவும் நம்புகின்றனர்.

**வேதாகமப் பார்வை:** விசுவாசத்தைக் குறித்த இவர்களின் இந்த வாக்கியத்தை வாசிக்கும்போது சரியானது போல் தெரியலாம். ஆனால் நன்கு கவனித்தால், இவர்கள் விசுவாசத்தை மட்டும் முக்கியப்படுத்தி, விசுவாசத்தின் ஆதாரமான தேவனை புறக்கணிக்கின்றனர் என்பதை புரிந்துகொள்ளக்கூடும். தேவனே நம் விசுவாசத்தின் ஆதாரமாய் இருக்கவேண்டும். விசுவாசத்தை இவர்கள் அதிகப்படியாய் வலியுறுத்தி, தேவனுக்கு மேலே அதை சக்திவாய்ந்ததாய் அடையாளப்படுத்துவதே இவர்களின் முக்கிய தவறு.

"நம்புங்கள், நல்லதே நடக்கும்" என்று பொது ஜனமக்கள் சொல்லுவதை நாம் கேட்டிருக்கக்கூடும். இது மக்களின் மனவலிமையை தூண்டுவிடும் ஊக்க பேச்சாளர்களின் வாக்கியமே தவிர, கடவுளை மையப்படுத்தும் வாக்கியமில்லை. இதேபோன்ற ஒரு கடவுளில்லாத ஊக்கத்தை தான் விசுவாசத்தைக் குறித்து செழிப்பின் உபதேசம் போதிக்கிறது. கேட்பதற்கு நேர்மறையான வேதாகம கருத்துபோல தோன்றினாலும், அவர்கள் விசுவாசத்தின் ஆதாரமாகிய தேவனைத் தவிர்த்து, வெறும் மனிதனின் மனவலிமையை ஊக்கப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு தங்களின் போதனையை நியாயப்படுத்துகின்றனர்.

செழிப்பின் உபதேசம், பூமிக்குரிய செழிப்பையே குறிவைத்து பரலோகத்தின் ஆசீர்வாதங்களை தவறவிடுகிறது. இது முழுவதும் மனிதனையும் பூமிக்குரிய ஆசீர்வாதங்களையும் மையப்படுத்தி சத்தியத்திலிருந்து திருச்சபையை திசைதிரும்பச் செய்யும் அபாயகரமான போதனை. ஐசுவரியத்தை சேகரித்த ஒரு மனிதனைப் பார்த்து, "மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும்" (லூக்கா 12:20) என்று இயேசு கேட்கிறதை வேதத்தில் பார்க்கமுடியும். இரண்டு எஜமான்களுக்கு ஒருவரால் ஊழியம் செய்யமுடியாது. செழிப்பு உபதேசம், செழிப்பை தேவனுக்கும் மேலான தேவையாய் மாற்றிவிடுகிறது; விசுவாசத்தை தேவனுக்கும் மேலாக வல்லமையுள்ளதாய் காண்பிக்கிறது. ஜெபத்தை தேவனை கட்டுப்படுத்தும் கருவியாய் சித்தரிக்கிறது.

தேவன் இரட்சிப்பை ஏழை பணக்காரன் என்னும் பாகுபாடில்லாமல் அனைவருக்கும் அருளுகிறார். மேலும் "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்" என்று இயேசு சொல்லுகிறார். உபத்திரவத்தின் பாதையில்தான் தேவன் நமக்கான ஆசீர்வாதத்தை வைத்திருக்கிறார். பாடுகளின் பாதை வழியாய் நம் வாழ்க்கை தொடர்ந்தாலும், நிலையான சமாதானத்தை அனுதினமும் நம்முடைய இரட்சிப்பு நமக்கு கொடுக்கத் தவறவில்லை. மெய்யான தேவனையும் அவர் நமக்கு அளித்திருக்கும் பிள்ளை என்னும் பிரம்மாண்ட அங்கீகாரத்தையும் குறைத்து மதிப்பிடும் செழிப்பின் போதனைகளை இனங்கண்டு, அவைகளிலிருந்து நம்முடைய திருச்சபையை பாதுகாப்போம்.



# தொடர்ச்சியான ஜெபம் எல்லாற்றையும் தரும்

Rev. R.தாசையா

தேனி மண்டல தலைமைப் போதகர்

## இல்லாமையிலும் ஜெபம் :

ஆதியாகமம் 28:20,21-ல் **"அப்பொழுது யாக்கோபு: தேவன் என்னோட இருந்து நான் போகிற இந்த வழியில் என்னைக் காப்பாற்றி, உண்ண ஆகாரமும் உடுக்க வஸ்திரமும் தந்து, என்னை என் தகப்பன் வீட்டுக்கு திரும்பி வரப்பண்ணுவாரானால்,கர்த்தர் எனக்கு தேவனாயிருப்பார்".**

யாக்கோபு தன் வீட்டை விடுகிறான். தாயின் அரவணப்பை விடுகிறான். பெற்ற சேஷ்ட புத்திரத்தை பாக்கியத்தை விடுகிறான் (ஆதி.28:28,36,43,44). இந்த சூழ்நிலையில் தேவன் தன்னோடு இருக்கவும், காப்பாற்றவும், வாழ்வாதாரம் சந்திக்கப்படவும், வாழ்ந்து திரும்பி வர ஜெபிக்கிறான். தேவன் கூட இருப்பேன், உன்னை திரும்பி வரப்பண்ணுவேன். உன்னை கைவிட மாட்டேன் என்று ஜெபத்துக்கு பதில் தருகிறார். எனவே நமது ஒன்றுமில்லாத நிலையிலும் தேவனே எல்லாவற்றையும் உண்டாக்கி தர ஜெபிப்போம். தேவையானவற்றை தேவனே ஆச்சரியமாய் உண்டாக்கி தருவார்.

## இயலாமையிலும் ஜெபம் :

ஆதி.30:1,2-ம் **"ராகேல் தான் யாக்கோபுக்குப் பிள்ளை பெறாததைக் கண்டு, தன் சகோதரியின் மேல் பொறாமை கொண்டு, யாக்கோபை நோக்கி, எனக்குப் பிள்ளை கொடும், இல்லாவிட்டால் நான் சாகிறேன் என்றாள். அப்பொழுது யாக்கோபு ராகேலின் மேல் கோபங்கொண்டு; தேவனல்லோ உன் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார். நான் தேவனா? என்றான்.**

ராகேல் யாக்கோபிடம் எனக்கு பிள்ளை தாரும். இல்லாவிட்டால் நான் சாகிறேன். இது யாக்கோபின் மனதை எவ்விதமாக பாதித்திருக்கும்? அல்லது ராகேலின் மனஅழுத்தம் எவ்வளவு அதிகமாயிருந்திருக்கும்? **யாக்கோபு தேவனிடம் பேசும் அளவுக்கு யாக்கோபுக்கு ஒரு நல்ல ஆவிக்குரிய நிலையிலிருந்தும்** ஒரு தேவ மனிதனுக்கு ஏற்பட்டிருக்கும் இயலாமையை பார்க்கிறோம். யாக்கோபு ராகேலிடம் சொல்லும் வார்த்தை **நான் தேவனா?** இது தேவன் செய்ய வேண்டிய வேலை என்பதை யாக்கோபு அறிந்தபடியால் நிச்சயமாய் தேவனை நோக்கிப் பார்த்திருப்பார். தேவன் ராகேலுக்கு குழந்தை கொடுத்தார். உங்கள் தொடர்ச்சியான ஜெபம் உங்கள் இயலாமையை ஒன்றுமில்லாததாக மாற்றி தேவன் செய்வாரென்று தேவனை சார்ந்துகொள்ள வழி காட்டும். எனவே **இயலாமையிலும் ஜெபியுங்கள்.**

## இருக்கும்போதும் ஜெபம் :

ஆதியாகமம் 32:9-12 **"பின்பு யாக்கோபு: என் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும், என் தகப்பனாகிய ஈசாக்கின் தேவனுமாய் இருக்கிறவரே; உன் தேசத்துக்கும் உன் இனத்தாரிடத்துக்கும் திரும்பிப்போ, உனக்கு நன்மை செய்வேன் என்று என்னுடனே சொல்லியிருக்கிற கர்த்தாவே, அடியேனுக்கு தேவன் காண்பித்த எல்லா தயவுக்கும் எல்லா சத்தியத்துக்கும் நான் எவ்வளவேனும் பாத்திரன் அல்ல.**

**நான் கோலும் கையுமாய் இந்த யோர்தானைக் கடந்துபோனேன். இப்பொழுது இவ்விரண்டு பரிவாரங்களையும் உடையவனானேன். என்**

**சகோதரனாகிய ஏசாவின் கைக்கு என்னைத் தப்புவியும், அவன் வந்து என்னையும் பிள்ளைகளையும் தாய்மார்களையும் முறிய அடிப்பான் என்று அவனுக்கு பயந்திருக்கிறேன்.**

**தேவரீரோ; நான் உனக்கு மெய்யாகவே நன்மைசெய்து உன் சந்ததியை எண்ணி முடியாத கடற்கரை மணலைப்போல மிகவும் பெருகப்பண்ணுவேன் என்று சொன்னீரே என்றான்".**

இப்போது யாக்கோபுக்கு அனைத்து ஆசீர்வாதங்களும் ஜெபத்தில் வந்திருந்தாலும் என்னால் எல்லாம் முடியும். இதை வைத்து சாதித்து விடுவேன் என்று எண்ணாமல் அடியேனுக்கு தேவரீர் காண்பித்த எல்லா தயவுக்கும் எல்லா சத்தியத்துக்கும் நான் எவ்வளவேனும் பாத்திரன் அல்ல என்ற தாழ்மையாக தேவனை நினைத்து பார்க்கும் **ஜெபத்தை எல்லாம் இருக்கும்போது** ஜெபிக்கிறான்.

இன்று அநேகர் ஒன்றும் இல்லாமல் இருக்கும்போது ஜெபிக்கும் ஜெபம் எல்லாம் இருக்கும்போது ஜெபிப்பதில்லை. நாம் அப்படி இருக்கக்கூடாது (ஆதி.33:11; உபா.8:7-10,17,18). நமது நீதியினிமித்தம் நம் நிமித்தம் தேவன் செய்வதில்லை. அவர் நிமித்தம் செய்கிறார்.

### இறுதிவரை ஜெயம் :

ஆதி.48:11,15,16 **"இஸ்ரவேல் யோசேப்பை நோக்கி, உன் முகத்தைக் காண்பேன் என்று நான் நினைக்கவில்லை. ஆனாலும், இதோ சந்ததியையும் காணும்படி தேவன் எனக்கு அருள் செய்தார் என்றான்.**

**அவன் யோசேப்பை ஆசீர்வதித்து: என் பிதாவாகிய ஆபிரகாமும் ஈசாக்கும் வழிபட்டு வணங்கிய தேவனும், நான் பிறந்த நாள் முதல் இந்நாள் வரைக்கும் என்னை ஆதரித்து வந்த தேவனும், எல்லாத் தீமைக்கும் நீங்கலாக்கி என்னை மீட்ட தூதனுமானவர் இந்த பிள்ளைகளை ஆசீர்வதிப்பாராக.**

**என் பேரும் என் பிதாக்களாகிய ஆபிரகாம் ஈசாக்கு என்பவர்களின் பேரும் இவர்களுக்கு இடப்படக்கடவது. பூமியின் இவர்கள் மிகுதியாய் பெருகக்கடவர்கள் என்றார்".**

யாக்கோபு வயது முதிர்ந்து விட்டார். கண்கள் மங்கலாகிவிட்டது. ஆனால் ஜெபத்தை மறந்துவிடவில்லை. ஜெபத்தின் மூலம பெற்ற ஆசீர்வாதத்தை மறந்து விடவில்லை. ஜெபம்செய்தால் ஆசீர்வாதம் வரும் என்று நன்றாக ஜெபத்தை குறித்த ஞானமும் ஞாபகசக்தியும் யாக்கோபுக்கு இருந்தபடியால் யோசேப்பின் இரண்டு குமாரதையும் ஆசீர்வதித்து ஜெபிக்கும் ஜெபத்தை இந்த வசனங்களில் பார்க்கிறோம். ஜெபிக்கும் யாக்கோபுக்கு கடைசி நேரத்திலும் ஆசீர்வாதம் குறையவில்லை. யோசேப்புக்கு தன்னிடத்தில் இருந்த நிலத்தை கொடுத்து அவனை ஆசீர்வதித்தான் (ஆதி.48:21,22).

அன்பான தேவ ஜனமே, ஜெபத்தில் சோர்ந்து போகக்கூடாது. கிடைக்க வேண்டியது தாமதமானாலும் நமது ஜெபத்தை அனேகர் ஏளனம் செய்தாலும் யாக்கோபைபோல நமது **இல்லாமையிலும்** ஜெபிக்க வேண்டும், நமது **இயலாமையிலும்** ஜெபிக்க வேண்டும். ஏன் நம் வாழ்நாள் **இறுதிவரையிலும்** அனேக ஆசீர்வாதங்களை நமக்கு கிடைக்க நம் மூலமாய் மற்றவர்களுக்கு கிடைக்க நாம் ஜெபித்துக்கொண்டே இருக்க வேண்டும்.

மத்.7:7-ல் கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும் என்கிற வார்த்தையின் மூல பாஷையின் விளக்கம் நீங்கள் கேட்பதை பெற்றுக்கொள்ளும்வரை கேட்டுக் கொண்டே இருங்கள். தட்டிக்கொண்டே இருங்கள். கதவு திறக்கும் பதில் வரும்.

## அன்பு என்னும் உன்னத பண்பு

**தேவ அன்பாகிய உன்னத பண்பில் எவ்வளவு வளர்ந்திருக்கிறீர்கள் என்று உங்களை சோதித்துப் பாருங்கள் (1 கொரி.13:4-6).**

**நீடிய சாந்தம் :** எனக்கு எவ்வளவு சாந்தம், அடக்கம், பணிவு உள்ளது?

**தயவுள்ளது :** நான் தயவாக இருக்கிறேனா, இரக்கமுள்ளவனா?

**பொறாமையில்லாதது :** யார் மீதாவது எனக்குப் பொறாமை உண்டா?

**தன்னைப் புகழாது:** என்னையே புகழும் பழக்கமும் நான் புகழப்பட வேண்டும் என்ற விருப்பமும் எனக்கு உண்டா?

**இறுமாப்பாயிராது:** நான் இறுமாப்பாயிருக்கிறேனா? அல்லது தாழ்மையுடன் இருக்கிறேனா?

**அயோக்கியமானதைச் செய்யாது:** என் செயல்களில் தற்போது முரட்டுத்தனம் போன்றவை காணப்படுகின்றனவா?

**தற்பொழிவை நாடாது :** என் வாழ்க்கை சுயநலத்தால் நிரம்பியிருக்கின்றதா?

**சினமடையாது:** சிறுகாரியங்களுக்கும் சினமடையும் வழக்கம் எனக்கு உண்டா? யார் மீதாகிலும் கோபத்தைப் பேணி வைத்திருக்கிறேனா?

**தீங்கு நினையாது:** என் நினைவுகள் எப்படி இருக்கின்றன? குறிப்பாக மற்றவர்களைக் குறித்த நினைவுகள்.

**அநியாயத்தில் சந்தோஷப்படாது:** நம்மை எதிர்ப்பவர்களுக்கு யாரேனும் அநியாயம் செய்தால் நாம் அதற்காக மகிழ்ச்சி அடைகிறோமா? அப்படித்தான் வேண்டும் என்று கூறுகிறோமா?

**சத்தியத்தில் சந்தோஷப்படும் :** நம்முடைய மகிழ்ச்சி எதில் இருக்கிறது?

**சகலத்தையும் தாங்கும் :** நான் அவ்வாறு இருக்கிறேனா?

**சகலத்தையும் விசுவாசிக்கும் :** வேதத்தில் உள்ள அனைத்தையும் விசுவாசிக்கிறேனா?

**சகலத்தையும் நம்பும் :** என் நம்பிக்கை எதில் உள்ளது.

**சகலத்தையும் சகிக்கும் :** என்னுடைய சகிப்புத்தன்மை எந்த அளவிற்கு இருக்கிறது.

நம்முடைய குறைபாடுகளை மேற்கண்ட குறிப்புகளிலிருந்து கண்டறிந்து அறிக்கை செய்வோமாக.

இனி இப்பண்புகள் நம்மில் காணப்படுவதற்கு, நாம் என்ன செய்ய வேண்டும் என்று ஆராய்ந்து, அனுதின வாழ்வில் செயல்படுத்துங்கள்.

பாராட்டுகிறேன், நன்றி, உங்களுக்கு உதவி செய்யலாமா? வருந்துகிறேன், மன்னியுங்கள் என்பவை போன்ற சொற்கள் என் வாயில் அடிக்கடி காணப்படுவதாக.

பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரி வரங்கள், கனி என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது.



தமிழ் பிரதேச ஆண்கள் ஐக்கிய ஊழியங்கள்

# அறியப்படாத தலைவன்: ஒபதியா

**Rev. N.ஜான்சன்**

மண்டல தலைமைப் போதகர், ஸ்ரீபெரும்புதூர் மண்டலம்

இஸ்ரேலின் வரலாற்றில் ஒரு இருண்டகாலத்தில் வாழ்ந்தவர் இந்த ஒபதியா. ஆகாப் ராஜா மற்றும் யேசபேலின் துன்மார்க்கமான ஆட்சி தேசத்தின்மேல் தேவ நியாயத்தீர்ப்பைக் கொண்டு வந்தது. ஆகாபின் அரண்மனையில் ஆளுநராக பணியாற்றிய ஒபதியா, கடுமையான பஞ்சம் மற்றும் குழப்பத்தின் மத்தியில், தேவனுக்கு உண்மையுள்ள மனிதனாக வாழ்ந்தார்.

புகழுக்கும் அங்கீகாரத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கும் இவ்வுலகில், தேவனுக்காக பெரிய காரியங்களைச் செய்தாலும் அதிகமாக அறியப்படாத பல சாதனையாளர்களில் ஒருவராக ஒபதியா திகழ்கிறார். பரிசுத்த வேதம் மெச்சுகிற இவருடைய அசாதாரண தைரியத்தையும், உண்மையையும் குறித்த மூன்று பாடங்களை அவருடைய வாழ்க்கையிலிருந்து நாம் கற்றுக்கொள்ள முடியும்.

**1. ஆபத்தை எதிர்கொள்ளும் தைரியம்:** விக்கிரக ஆராதனைக்காரியாகிய யேசபேல், தேவனுடைய ஆலயத்தைப் பாழாக்கி, பாகாலுக்குப் பலகோயில்களைக்கட்டி, அரசாங்கப்பணத்தில் பூசாரிகளை நியமித்தாள். ஆனாலும் பாகாலுக்கு முழங்கால்படியிடாத 7000 பக்தர்களை கர்த்தர் பாதுகாப்பாக வைத்தார் (1இராஜா.19:18).

பாகாலை சேவிக்க மறுத்த கர்த்தருடைய தீர்க்கதரிசிகளை யேசபேல் கொல்ல முயன்றபோது, இவ்வளவு உபத்திரவங்களின் மத்தியிலும், ஒபதியா தனது உயிரைப்பணயம் வைத்து, அவர்களில் 100 பேரை மறைத்து பாதுகாத்தார் (1இராஜா.18:3-4).

கர்த்தரின் தீர்க்கதரிசிகளைப் பாதுகாக்கவும் ஆகாபை எதிர்கொள்ளவும் தனது உயிரையும் பணயம் வைத்தார் ஒபதியா. நம் இந்திய தேசத்திலும் இதே சூழ்நிலைகளை நாம் எதிர்கொள்கிறோம். ஆனால் உபத்திரவங்களின் மத்தியில் புருஷர்களாகிய நாம் கர்த்தருக்காக வைராக்கியமாக வாழ்கிறோமா? நம் விசுவாசத்திற்காக தைரியமாக போராடுகிறோமா? என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

**2.தீமையின் மத்தியிலும் விசுவாசம்:** இஸ்ரவேல் தேசம் முழுவதும் துன்மார்க்கத்தால் சூழப்பட்ட நிலையிலும், ஒபதியா தேவனுக்கு உண்மை உள்ளவராக இருந்தார். யேசபேலின் உபத்திரவத்துக்குப் பயந்து, இஸ்ரவேல் தேசத்தில் வசித்த ஆசாரியரும், லேவியரும் எல்லாவற்றையும் விட்டுவிட்டு, தங்கள் உயிரைக்காத்துக்கொள்ள யூதா தேசத்தில் உள்ள எருசலேமுக்கு ஓடிவந்து விட்டார்கள் (2 நாளா. 11:14).

ஆனால் ஒபதியா தைரியமாக இஸ்ரவேலில் தங்கியிருந்தது மட்டுமல்ல, பாகாலையும், விக்கிரகங்களையும் வணங்காமல், உண்மையாகக் கர்த்தரை தன் உள்ளத்தில் ஆராதிக்கிறவராக காணப்பட்டார். அதுமாத்திரமல்ல, உபத்திரவப்படுகிற

தேவமக்களுக்கு அரசாங்கத்திற்குத் தெரியாமல் இரகசியமாக உதவிசெய்பவராக காணப்பட்டார்.

இன்று உலகமெங்கும், விசேஷமாக வடஇந்தியாவில் தேவனுக்காக உபத்திரவங்களை சகிக்கும் ஊழியர்களை ஜெபத்தில் தாங்கும் புருஷர்களாக நாம் காணப்பட வேண்டும். மேலும் ஒபதியாவைப் போல, மிஷனரிகளை நம் பொருளாதாரத்தில் தாங்குபவர்களாக நாம் மாறவேண்டும். வருடத்திற்கு ஒருமுறையாவது வடஇந்தியாவிற்கு மிஷனரிப்பயணம் மேற்கொண்டு அங்குள்ள விசுவாச மக்களை விசுவாசத்தில் பலப்படுத்துகிறவர்களாக காணப்படவேண்டும்.

**3. தாழ்மையும் கீழ்ப்படிதலும்:** ஒபதியா மனிதர்களின் அங்கீகாரத்தை நாடவில்லை; அவர்வெறுமனே கர்த்தரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தார். ஒபதியா கர்த்தருக்கு மிகவும் பயந்து நடக்கிறவனாயிருந்தான் (1இராஜா.18:3) என்று பரிசுத்த வேதம் அவரைக் குறித்து சாட்சி பகருகிறதைக் காண்கிறோம். எலியா தீர்க்கதரிசி, தான் ஆகாப் ராஜாவை சந்திக்க விரும்பும் தகவலைசொல்லும்படி கட்டளையிட்டபோது, ஆபத்தான அந்த வேலையைச்செய்ய தன்னை ஒப்புக்கொடுத்தார் ஒபதியா.

தைரியசாலிகள் என்பவர்கள் பயமே இல்லாதவர்கள் என்று அர்த்தம் அல்ல. ஆனால் பயத்தின் மத்தியிலும் தைரியமாக செயல்படுகிறவர்களே உண்மையான தைரியசாலிகள். நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் (மாற்கு 16:15) என்ற நம் இராஜாதி இராஜாவின் பிரதானக் கட்டளைக்கு நாம் கீழ்ப்படிகிறோமா? புருஷர்களாகிய நாம் நம் வேலை ஸ்தலத்திலும், வீட்டை சுற்றியும் உள்ள மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கிறோமா?

கர்த்தர் நமக்குக் கொடுத்துள்ள இந்த மாபெரும் பொறுப்பை நாம் நிறைவேற்றும்போது, இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் (மத்.28:20) என்று நம் கர்த்தர் இயேசுவின் வாக்குத்தத்தின்படி அவர் நம்மோடு இருந்து வழிநடத்துவார்.

ஒபதியாவின் வாழ்விலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடங்கள் என்ன? நமது செயல்கள், எவ்வளவு சிறியதாக இருந்தாலும், தேவனுக்கு உண்மையாக அதைச்செய்யும்போது, அநேகருடைய வாழ்வில் அது நிச்சயம் தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே, துன்பங்களின் மத்தியிலும் துணிச்சலான நம்பிக்கையை வெளிப்படுத்திய ஒபதியாவைப்போல் இருக்க முயற்சிப்போம். நம் வாழ்வு தேவனின் வல்லமைக்கும் உண்மைக்கும் சான்றாக அமையட்டும்.

தாங்கள் பரிபூரண ஜீவன் பத்திரிக்கை மூலமாக ஆசீர்வதிக்கப்பட்டிருந்தால் உங்கள் சாட்சிகளை வாட்ஸ்அப் மூலமாகவோ, தபால் மூலமாகவோ தெரிவிக்கலாம். மேலும் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு பயனுள்ள செய்திகள், துணுக்குகள் ஆகியவற்றையும் அனுப்பலாம்.

**நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

**Rev. JERRY DANIEL**
303, C Block, Roshan Residency,
6, VOC Road, Cantonment, TRICHY-620 001
Cell : 94434 15484



# இன்னும் இடம் இருக்கிறது


**Rev.V. லாரன்ஸ் மனோஜ்குமார்**

தலைமைப்போதகர், இவாஞ்சல் ஏ.ஜி.சபை, நாகமலை
உதவி இயக்குநர் - மிஷன் இலாக்கா வடமேற்கு


"... ஊழியக்காரன் அப்படியே செய்து: ஆண்டவரே, நீர் கட்டளையிட்டபடி செய்தாயிற்று, இன்னும் இடம் இருக்கிறது என்றான்" (லூக்கா-14:22).

இதுவரையிலும் ஆண்டவரின் இராஜ்யத்தினுள் வராமல் இருக்கும் கோடிக்கணக்கான மக்களை கருத்தில் கொண்டு, அவர்கள் மீது கரிசனை வைத்து ஆத்தும பாரத்தோடு செயல்பட்டு அவர்களை தேவ இராஜ்யத்திற்குட்பட பண்ணுவதே மிஷன் ஊழியத்தின் தலையாய நோக்கம்.

இந்த மிஷன் ஊழியத்தை நிறைவேற்றுவதற்கு ஜெபம் (Prayer), திட்டமிடுதல் (Planning), பங்கெடுத்தல் (Participation-the going or sending aspect), கைகோர்த்தல் (Partnerships- the giving aspect) ஆகிய காரியங்கள் அதிமுக்கியமானவை.

ஒரு காலகட்டத்தில் புவியியல் சார்ந்த அணுகுமுறையில் (Geographical Approach) மிஷன் ஊழியங்கள் செய்யப்பட்டன. பின்னர் மக்களின் அணுகுமுறை (People Group Approach) செய்வதற்கான விழிப்புணர்வு பரவலாக ஏற்பட்டு இன்று வரையிலும் அதற்கான முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. இந்த ஊழியத்தில் ஒவ்வொரு திருச்சபைக்கும், ஒவ்வொரு ஊழியருக்கும், ஒவ்வொரு விசுவாசிக்கும் ஒரு முக்கிய பங்கை கர்த்தர் வைத்திருக்கிறார்.

மத்தேயு 4:19-ல் நமது ஆண்டவராகிய இயேசு, 'என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரை பிடிக்கிறவர்களாக்குவேன்' என்றார். இது, அன்று அவரைப் பின்பற்றிய சீஷர்களுக்கு மட்டும் கொடுக்கப்பட்ட வார்த்தை அல்ல, இன்றுவரை அவரை பின்பற்றுகின்ற அனைவருக்குமே கொடுக்கப்பட்ட பொறுப்புள்ள வாக்குத்தத்தமாக அது இருக்கிறது. அவரை பின்பற்றும்போது மனுஷரை பிடிக்கும் கிருபையை தருகிறார். அதே வேளையில் அவருக்காக மனிதர்களை ஆதாயம் பண்ணுகிற பொறுப்பையும் ஆண்டவர் தருகிறார். இதன் மூலம் தன்னை பின்பற்றுபவர்களுக்கு ஒரு நோக்கத்தை (Purpose) இயேசு தருகிறார். அந்த நோக்கத்தை நிறைவேற்ற விரும்பி செயல்படுபவர்களுக்கு வல்லமையையும் அதிகாரத்தையும் கொடுக்கிறார் (லூக்கா-9: 1,2) (Power and Authority)

அதோடு கூட ஒரு திட்டத்தையும் கொடுக்கிறார் (மத். 28:19,20) (Plan) நீங்கள் புறப்பட்டு போங்கள், உபதேசம் பண்ணுங்கள், பூமியின் எல்லை வரை செல்லுங்கள், சகல ஜாதிகளையும் (ஜனங்களையும்) சீஷராக்குங்கள்: இதுவே அந்த திட்டம்-இந்த திட்டத்தை ஏற்றுக்கொண்டு செயல்படுத்துபவர்களுக்கென்று பிரத்யேகமாக ஒரு வாக்குத்தத்தத்தை தருகிறார். (Promise) - இதோ உலகத்தின் முடிவு பரியந்தமும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்.

இந்த உலகில் ஏறக்குறைய 16000 மக்கள் இனங்கள் இருப்பதாகவும் அதில் 9000 மக்களினங்கள் மட்டுமே சந்திக்கப்பட்டிருப்பதாகவும் இன்னமும் 7000 மக்களினங்கள் சந்திக்கப்படவில்லை எனவும் ஒரு கணக்கெடுப்பு சொல்கிறது. இந்த சந்திக்கப்படாத மக்களினங்களும் இரட்சிப்பின் சுவிசேஷத்தை கேட்டு ஆண்டவரின்

இராஜ்யத்திற்குட்பட்டு வர, அவரது இராஜ்யத்தில் இன்னும் ஏராளம் இடம் இருக்கிறது. ஆண்டவரின் இருதயத்தில் அவர்களுக்காக இடம் இருக்கிறது. இந்த நோக்கத்தை நிறைவேற்றவே ஆண்டவர் தமது திருச்சபைக்கு அழைப்பு கொடுக்கிறார்.

திருச்சபைக்குள் கர்த்தர் அழைத்து வந்த ஒவ்வொருவரையும், அவர் இரட்சித்த பிரதான நோக்கங்களில் ஒன்று, அவர்கள் மட்டும் பரலோகம் செல்வதற்கு அல்லாமல், அவர்கள் ஒவ்வொருவர் மூலமாகவும் ஒரு சிலராகிலும் இரட்சிப்பிற்கு நேராக வழிநடத்தப்பட வேண்டும். காரணம், ஒருவராகிலும் கெட்டுப்போக, அழிந்துபோக அவர் விரும்பவில்லை; அநேகம் ஜனங்கள் அவரிடமாய் வர அவர் விரும்புகிறார்.

ஆகவே, ஒவ்வொரு விசுவாசியும் தான் ஒரு மிஷனரி என்றும் ஒவ்வொரு ஸ்தலமும் ஒரு மிஷன் ஸ்தலம் என்றதுமான எண்ணத்திற்குள் வந்துவிட வேண்டும்.

கர்த்தரின் இராஜ்யத்திற்குள் இன்னும் எத்தனை பேர் இரட்சிக்கப்பட்டு வந்தாலும் 'இன்னும் இடம் இருக்கிறது' என்பதை ஆண்டவர் வலியுறுத்துகிறார். இன்னமும் சந்திக்கப்படாத மக்களினங்கள் சந்திக்கப்படுவதற்கான அவசியம் இருக்கிறது. இதனை விளக்கும்படியாக ஆண்டவர் ஒரு உவமையை லூக்கா 14: 15-24ல் கூறினார். சிலாக்கியம் பெற்றவர்களாக தங்களை கருதின யூதர்கள் ஒருபுறம் (இந்த உவமையில் விசேஷித்த அழைப்பை பெற்றவர்கள்), சிலாக்கியம் பெறாதவர்களாக (அழைப்பை) பெறாதவர்களாக சித்தரிக்கப்பட்டுள்ள புறஜாதிகள் (இந்த உவமையில், ஊனர், சப்பாணிகள் போன்றோர்). இந்த உவமையில் ஆண்டவர் முன்னிலைப்படுத்த விரும்பும் காரியம் 'இன்னும் இடம் இருக்கிறது' (வச.22), என் வீடு நிறையும்படியாக கூட்டிக்கொண்டு வா (வச.23).

**இந்த உவமையில் 4 வித கதாப்பாத்திரங்களை காண இயலும்.**

(1). எஜமான்-விருந்தை ஆயத்தம் செய்தவர் (நல்லெண்ணத்தோடும், பெருந்தன்மையோடும் தன்னிடமுள்ள உச்சிதங்களைக் கொடுக்க விரும்பி அநேகருக்கு அழைப்பை கொடுத்தவர்).

(2). முதலாம் அழைப்பை பெற்றவர்கள்-ஒரு குறிப்பிட்ட மக்கள் (சிலாக்கியம் பெற்றவர்கள்-யூதர்கள்) (The Privileged group - Jews).

(3). இரண்டாம் அழைப்பை பெற்றவர்கள்-மற்றொரு குழுவினர் (சிலாக்கியம் பெறாதவர்கள்-புறஜாதிகள்) (The non-privileged group - Gentiles).

(4). அனுப்பப்பட்ட ஊழியர்கள் (புதிய ஏற்பாட்டு ஊழியர்கள் மற்றும் விசுவாசிகள்).

முதலாம் அழைப்பை பெற்றவர்கள் அந்த அழைப்பினை உதாசீனம் செய்தார்கள், சாக்கு போக்குகளை சொன்னார்கள். எஜமான் கொடுக்கும் அழைப்பை உதாசீனம் பண்ணுவது எஜமானை உதாசீனம் பண்ணுவதற்கு சமம். ஆகவே அவர்கள் எஜமானோடு விருந்துண்ணும் சிலாக்கியத்தை தவறவிட்டார்கள்.

ஆண்டவராகிய இயேசு முதலாவது யூதர்களிடம் வந்தார் - ஆனால் அவர்கள் அவரை நிராகரித்தார்கள். 'அவர் தமக்கு சித்தமானதிலே வந்தார். ஆனால் அவருக்கு சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை' (யோவான் 1:11) என்று வசனத்தில் காண்கிறோம்.

எனவே, இரண்டாவது அழைப்பு புறஜாதிகளிடம் வந்தது. அதாவது, யூதமக்கள் அல்லாத அனைத்து பிற இனங்களும் தமக்கு சொந்தமானவர்களாய்

தம்மண்டை வரும்படி விரும்பி ஆண்டவர் தமது ஊழியர்களை அவர்களிடமாய் அனுப்புகிறார். 'தெருக்கள், வீதிகள், பெருவழிகள், வேலிக்கருகில் போன்ற இடங்களில் சென்று ஆட்களை அழைப்பது எதை காட்டுகிறது? யார் வேண்டுமானாலும் எஜமானிடம் வரலாம் - Now the banquet is open to all. எல்லா மக்களினங்களுக்கும் இடம் இருக்கிறது.

திருச்சபையாக இணைந்து, இன்னும் சந்திக்கப்படாத மக்களினங்களை இயேசுவிற்காக சந்திக்க இன்னும் முனைப்போடு செயல்பட பரிசுத்த ஆவியானவர் அருள் புரிவாராக.

எதிர்ப்புகள் இருப்பதை பார்க்கிலும், சந்திக்கப்படாத மக்களினங்களிடையே எதிர்பார்ப்புகள் அதிகம் இருக்கிறது. தங்களது வேதனை, துக்கங்கள், போராட்டங்கள், அறியாமை, கட்டுகள் போன்றவற்றிற்கு தீர்வு காணமுடியாமல் ஏங்கும் கூட்டம் இன்னும் இருக்கத்தான் செய்கிறது. அவர்களை சந்தித்து எஜமானிடம் அழைத்து வருவோமாக. அவரிடத்தில், இன்னும் இடம் இருக்கிறது.

## Burn! Learn! Learn! Turn!

There is a call to all the believers to burn, learn, earn and turn!

**BURN!** John the Baptist was a **burning** and shining light(John 5:35). If there is anything we need today, it is revival **fire**. Fire to stir our cold spiritual life! Fire to drive us on to our knees! Untold millions today are dying untold because we lack the fire of the Holy Ghost. Let us be freshly baptized with fire to burn out for God.

**LEARN!** The Bible says, “Jesus increased in **wisdom**” (Luke 2:52). Timothy was a young man. Apostle Paul's counsel to him was, “**Study** to show thyself approved unto God” (2 Tim. 2:15). Set apart a time every day for the constructive study of God's Word. Let the Bible be your delight. Read also sound spiritual books especially the biographies of pioneer missionaries and great men of God.

**EARN!** Earning, like learning, needs high spiritual motivation. Earn all you can and give all you can! The Bible condemns earning for keeping. Let us EARN TO GIVE. Jesus said, “It is more blessed to give than to receive” (Acts 20:35). Give according to your income lest God makes your income according to your giving! Not how much of my money will I give to God, but how much of God's money will I keep for myself ?

**TURN!** Burn. Learn. Earn. All to TURN men and women to Christ! We are called to turn the hearts of people to be tuned to God. We should be found constantly at it. Today's world is yet to call us as, “these that have **turned** the world upside down!”(Acts 17:6).

**Source: Youth Revival Letters**

# அபிஷேகம்



Rev. **Steve Asir**
(President - Christ's Ambassadors)

எரிந்து பிரகாசிக்கச் செய்கின்ற தேவனுக்கு ஸ்தோத்திரமும் மகிமையும் உண்டாவதாக. எந்த ஒரு பொருளுக்கும் ஒன்றுக்கும் மேற்பட்ட பயன்பாடுகள் உண்டு. (எ.கா: பாத்திரம்) உணவு தயாரிக்க, பத்திரப்படுத்த, மற்றும் பல. ஆனால் விளக்குக்கு ஒரேயொரு பயன்பாடு மட்டும், அதாவது எரிவது, வெளிச்சம் கொடுப்பது.

ஒரு விளக்கு எரிய மூலதனமாக இருப்பது எண்ணெய். எண்ணெய் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற்கு அடையாளமாக பரிசுத்த வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விளக்கு ஒரு மனிதரின் வாழ்க்கைக்கு உதாரணமாக இருக்கும் பட்சத்தில், எண்ணெய் அந்த விளக்கை செயல்படுத்தும் காரணியாக இருக்கிறது.

**மூன்று வித விளக்குகள்**

1. **எண்ணெயில்லாத விளக்கு.** மத் 25:3 **Lamp without oil.**
2. **மூடப்பட்ட விளக்கு.** மத் 5:15. **Covered Lamp**
3. **எரியும் விளக்கு.** யாத்திராகமம் 27:20 **Burning and Shining Lamp.**

குத்துவிளக்கு எப்பொழுதும் எரிந்துகொண்டிருக்கும்படி இடித்துப் பிழிந்த தெளிவான ஒலிவ எண்ணெயை உன்னிடத்தில் கொண்டுவரும்படி இஸ்ரவேல் புத்திரருக்குக் கட்டளையிடுவாயாக என்று யாத்திராகமம் 27:20-ல் பார்க்கிறோம்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்மை விசுவாசிப்போரை உலகத்திற்கு வெளிச்சம் என்று மத் 5:14-ம் வசனத்தில் அதிகாரப்படுத்துகிறார்.

தன் தாயின் வயிற்றில் இருக்கும் போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பான் என்று யோவான் ஸ்நானனைக் குறித்து லூக்கா 1:15-ல் வாசிக்கிறோம்.

அபிஷேகத் தைலம் என்பது தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஒரு செயல்முறை. யாத் 30:23-26—ன்படி அபிஷேகத்தைலமானது வாசனை மூலிகைகளினால் சரியான அளவுகளால் தயாரிக்கப்படுவதாகும். அவ்வாறு தயாரிக்கப்பட்ட தைலமானது நபர்களையும், பொருட்களையும், தேவனுடைய பணிக்கென்று பிரத்யேகமாக தகுதிப்படுத்தும் அதிகாரம் அளிக்கப் பயன்படுத்தப்படும்.

விளக்குக்கு எண்ணெய் பயன்படுத்தப்படுவதுபோல் வாழ்க்கைக்குப் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் தேவை.

**எண்ணெயாகிய பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் நன்மைகள்:-**

## உறவு

விளக்கு தொடர்ந்து எரிவதற்கு விளக்கில் இருக்கும் திரி முறிக்கப்படாமல் எண்ணெயோடு நல்ல தொடர்பில் இருப்பது ஒரு விளக்கை அர்த்தமுள்ளதாக்குகிறது.

தேவன் மனிதனை அவரின் சாயலில் படைத்தார், காரணம் அவரைப் போல வாழவும் அவர் செய்ததைச் செய்யவுமே. மனிதன் உறவுகளுக்கு உரியவன். உறவுகளின் எல்லை வித்தியாசப்படலாம், ஆனால் உறவுகள் இல்லாமல் வாழ முடியாது. உறவுகளின் முன்னுரிமைகளில் முதல் இடத்தில் இருக்கவேண்டியவர் நம்மை படைத்த தேவாதி தேவன். அந்த உறவை உறுதி செய்கிறவர் பரிசுத்த ஆவியானவர். 1 கொரி 3:16-ல் பரிசுத்த ஆவியானவர் நம்மை தேவனுடைய ஆலயமாக மாற்றுகிறார். மத் 3:17-ல் இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாய் இருக்கிறேன் என்று பிதாவானவர் சொன்னபோது பரிசுத்த ஆவியானவர் இயேசு கிறிஸ்துவின் மேல் வந்திறங்கினதைக் காண்கிறோம்

## பாதுகாப்பு

ஒரு விளக்கு தொடர்ந்து எரிய அதற்குப் பாதுகாப்பு அவசியம். காற்று, தண்ணீர் போன்றவற்றால் விளக்கு அணைந்து போகும் அபாயம் உண்டு. அதுபோலவே, வாழ்க்கையில் தேவன் ஏற்றின இரட்சிப்பின் தீபம், விளக்கு, அணைந்து போகப் பல தீய வல்லமைகள் போராடுகிறது.

பாவ சோதனை மேற்கொள்ளாமல் ஜெயமாய் வாழ தேவபெலன் தேவை. அனுதினமும் தேவனைச் சார்ந்து வாழும் போது பரிசுத்த ஆவியானவர் வாழ்க்கையைப் பாதுகாக்கிறார்.

## பொறுப்பு


தேவன் ஏற்படுத்திய நிலையில் இருந்து செயல்படுவது. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் தேவனுடைய வேலையைப் பூமியில் நிறைவேற்றக் கொடுக்கப்படுகிறது. ஏசாயா 9:2—ல் சொல்லப்பட்டபடி அந்தகார இருளில் இருப்பவர்கள் ஆச்சரியமான ஒளியைக் காண்பார்கள் என்று பார்க்கிறோம். ஏசாயா 60:3-ல் உதிக்கிற உன் ஒளியினிடத்துக்கு ராஜாக்களும் நடந்து வருவார்கள். இவைகள் நிறைவேற நம்முடைய விளக்கு எண்ணெய் குறையாத புத்தியுள்ள கன்னிகையைப் போலக் காத்துக் கொள்ளுவோம்.

பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் ஒருவரின் வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கம் மிகப் பெரியது. பிறப்பு ஒரு சம்பவமாக இருந்தாலும் இறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும் என்று சொல்லப்படுவது சத்தியமாகும்.

அன்பான வாலிபரே! புத்தியுள்ள கன்னிகையாய், தேவனோடு நல் உறவு கொண்டு, வாழ்க்கையைப் பரிசுத்தமாய் பாதுகாத்து, உயிர்வாழும் நோக்கத்தை நிறைவேற்றும் நிச்சயத்தோடு வாழுங்கள்.



## இங்கிலாந்து ஊழியர்
## ஜான் வெஸ்லி நியமித்த பன்னிரண்டு ஒழுங்குகள்...



1. ஊக்கமும் சுறுசுறுப்பும் உள்ளவனாயிரு. ஒரு போதும் சும்மாயிராதே. உன் கரங்கள் எப்போதும் ஏதாவது ஒரு பயனுள்ள வேலையில் ஈடுபட்டிருக்கட்டும். காலத்தை வீணாக்காதே. தேவையான இடத்தில் அவசியமான அளவு நேரத்தை விட எவ்விதத்திலும் கூடுதலான நேரத்தைச் செலவிடாதே.
2. மிகவும் விழிப்புள்ளவனாயிரு. "கர்த்தருக்குப் பரிசுத்தம்" என்பதே உன் வாழ்வின் சட்டவாக்கியமாய் இருக்கட்டும்.

   எல்லா வெதுவெதுப்பையும், கேலி பேசுதலையும், முட்டாள்தனமான பேச்சையும் உன்னை விட்டு அகற்று.
3. பெண்களுடன் உரையாடுகையில் உன் உரையாடல் மிகவும் சுருக்கமானதாகவும் குறுகிய நேரமுடையதாகவும் இருக்கட்டும். முக்கியமாக இளம் பெண்களுடன் நீ சம்பாஷிக்கையில் மிகவும் ஞானத்தோடு நடந்து கொள்.
4. கிறிஸ்துவுக்குள்ளான உன் சகோதரர்களிடம் ஆலோசனை கேட்காமல் உன் திருமண காரியத்தில் எந்த முடிவும் எடுத்துவிடாதே.
5. உன் சொந்தக் கண்கள் காணாதிருக்க, யாரைக் குறித்துப் பேசப்படும் தீமையானவற்றை ஒருபோதும் நம்பாதே. எல்லாவற்றையும் அடிப்படையிலிருந்து சோதித்துப் பார்.
6. எந்த மனிதனைக் குறித்தும் தீமையானதைப் பேசாதிரு. உன் வார்த்தைகள் கேன்சரைப் போல அரித்துப் போடும் என்பதை நினைவில் வைத்துக்கொள். சம்பந்தப்பட்ட ஆளைச் சந்திக்கும் வரை உன் எண்ணங்களை உனக்குள்ளாக அடக்கி வைத்துக் கொள்.
7. யாரிடமாவது தவறைக் கண்டால் உடனடியாக நேருக்கு நேர் சுட்டிக்காட்டு.

   உன் மனதிலிருந்து பகை என்னும் நெருப்பை மிகச்சீக்கிரம் எடுத்துப்போடு.
8. பாவத்தைத் தவிர வேறு எதற்கும் வெட்கப்படாதே.
9. அழியும் ஆத்துமாக்களைக் காப்பதே உன் தலையான கடமை. எனவே இதற்காக நீ செலவு செய்வதுடன் செலவு செய்யப்படு.
10. எல்லாவற்றையும் குறிப்பிட்ட நேரத்தில் செய்; எல்லாவற்றிலும் ஒழுங்கைக் கடைப்பிடி. அவைகளை தேவ கோபாக்கினைக்கும் சபையின் கட்டுப்பாட்டுக்கும் பயந்து அல்ல, மனசாட்சியினிமித்தம் பற்றிக்கொள்.
11. எல்லாக் காரியத்தையும் தேவ சித்தத்தின்படி செய்.
12. கவனி! பல தடவைகள் பிரசங்கிப்பது மட்டும் உன் கடமையல்ல. எத்தனை ஆத்துமாக்களை மீட்க முடியுமோ, அத்தனை பேரையும் மீட்டு அவர்களை மனந்திரும்புதலுக்கு நேராக வழிநடத்தி, உன் முழு பெலத்தோடும் அவர்களைப் பரிசுத்தத்தில் ஊன்றக்கட்டு.



சிறுவர் பகுதி

# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ


## பாஸ்டர். பெவிஸ்டன்

பூரண கிருபை ஏ.ஜி சபை, கருப்பாயூரணி, மதுரை-20
Contributing Editor, Paripoorana Jeevan


ஹாய் குட்டீஸ்... எல்லாரும் எப்படியிருக்கிறீங்க? கர்த்தருக்குள் சந்தோஷமாக இருப்பீர்கள் என நம்புகிறேன். ஒரு சிறுவர் முகாமின் மதிய இடைவெளி நேரத்தில் ஒரு சிறுவன் ஓடி வந்து 'அங்கிள் தனி ஜெபம் பண்ணுறது முக்கியமா? குழுவாக, சபையாக, குடும்பமாக கூடி ஜெபிக்கிறது முக்கியமா? என அற்புதமான கேள்வியை கேட்டான். இப்போ நீங்க சரியான பதிலை சொல்லுங்க பார்க்கலாம். சிலர் தனி ஜெபம் என சொல்லுறீங்க... சிலர் குழு ஜெபம் என சொல்லுறீங்க.. ஒக்கே உங்கள் பதில்களுக்கு நன்றி! அன்று மதிய நேரத்தில் கேட்ட தம்பிக்கு நான் கூறிய பதிலை உங்களுக்கும் கற்றுக்கொடுக்க விரும்புகிறேன். இது சம்பந்தமா இரண்டு குட்டி கதைகள் சொல்லப்போறேன்... கவனமாக கேளுங்க ஒக்கே.

ஒரு வாலிபன் ஞாயிறு தவறாமல் ஆலயத்துக்கு வருவான். நல்ல பக்தி உள்ளவனாகவும் தேவனை ஆராதிப்பவனாகவும் இருந்தான். சபையின் போதகருக்கு அவன் மீது நல்ல அபிப்ராயம் உண்டு. திடீரென சில வாரங்கள் அவனை ஆலயத்தில் காணமுடியவில்லை. அவன் இருக்கும் இடம் காலியாக இருந்தது. ஆகவே போதகர் அவனுடைய வீட்டிற்கு சென்றார். குளிர்காலமானதால் அவன் வீட்டிற்கு வெளியே விறகுகளால் நெருப்புமூட்டி குளிர்காய்ந்து கொண்டிருந்தான். போதகரை கண்டதும் வரவேற்று நெருப்பின் அருகிலேயே ஒரு நாற்காலியை போட்டான். போதகர் எதுவும் பேசவில்லை. அவனும் அமைதியாகவே இருந்தான்.

அப்போது போதகர் எரிந்துகொண்டிருந்த ஒரு விறகு குச்சியை நெருப்பிலிருந்து எடுத்து தனியே வைத்தார். அந்த நெருப்பு மெல்ல அணைந்து அதன் தணலும் குறைந்துவிட்டது. சற்று நேரம் கழித்து மீண்டும் அந்த விறகு குச்சியை நெருப்பில் வைத்தார். அது மீண்டும் கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது. எல்லாவற்றையும் வாலிபன் கவனித்துக்கொண்டிருந்தான். அதுவரை பேசாமல் இருந்த போதகர் 'நான் வருகிறேன்' என்று சொல்லி கிளம்பினார். அப்போது வாலிபன், 'ஐயா நீங்கள் பேசாமலேயே இன்றைக்கு ஒரு உண்மையை எனக்கு புரிய வைத்துவிட்டீர்கள், இனி நான் தொடர்ந்து ஆலயத்துக்கு வருவேன்' என்று சொன்னான். போதகர் புன்முறுவலோடு விடைபெற்றார்.

தம்பி தங்கச்சி, இக்கதை முக்கியமான பாடத்தை நமக்கு விளக்குகிறது. நாம் எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கவும், பல மாற்றங்களை ஏற்படுத்தவும் குழு ஜெபம் அவசியம் என்பதை உணர்த்துகிறது அப்படித்தானே? சிலர் நாங்கலாம் சபைக்கு வருவதில்லை. தனியாக ஜெபித்தாலே போதுமென நினைக்கிறாங்க. தனி ஜெபத்துக்கு நிகராக குழு ஜெபம் அவசியம் என்பதை நம்மால் இப்பொழுது புரியமுடிகிறதா?

ஒக்கே, அடுத்து தனி ஜெபம் சம்பந்தமாக ஒரு குட்டி கதை சொல்லவா? ஒரு மாட்டுக் கொட்டகையில் தன்னுடைய கைக்கடிகாரத்தை தொலைத்தார் விவசாயி.

தன்னுடைய நெருங்கிய நண்பர் பரிசாக கொடுத்தது அது. விவசாயி கவலைப்படாமல் இருக்க முடியவில்லை. தேடுதல் முனைப்புடன் தன் தோட்டத்தில் விளையாடிக்கொண்டிருந்த குழந்தைகளை அழைத்து, கைக்கடிகாரத்தை கண்டுபிடிப்பவர்களுக்கு ஒரு பரிசு அளிப்பதாக வாக்களித்தார். எல்லா சிறுவர்களும் ஆர்வமாக தேடினர். வெகுநேரமாகிவிட்டது. எல்லா இடங்களிலும் தேடியும் கடிகாரம் கண்டுபிடிக்கப்படவில்லை. மாலை நேரமானதால் குழந்தைகள் தங்கள் தங்கள் வீடுகளுக்கு திரும்பினர்.

சோர்வடைந்த விவசாயி கவலையுடன் அமர்ந்துவிட்டார். ஒரு சிறுவன் மட்டும் அவரிடம் வந்து 'ஐயா எனக்கு ஒரு நிமிடம் வாய்ப்பு கொடுங்கள், என்னால் கண்டுபிடித்துவிட முடியும்' என்று நம்பிக்கையுடன் சொன்னான். விவசாயியும் நம்பிக்கையின்றி சிறுவனுக்காக சம்மதித்தார். ஒரு நிமிடத்தில் சிறுவன் கைக்கடிகாரத்தை கொண்டுவந்து விவசாயியிடம் கொடுத்தான். ஆச்சரியப்பட்டட விவசாயி எப்படி உன்னால் முடிந்தது? என்று கேட்டார்.

'ஐயா நாங்கள் கூட்டமாக தேடும்போது, கடிகாரம் எங்கு உள்ளது என கண்டுபிடிப்பது கடினம். இப்போது சிறுவர்கள் யாரும் இல்லை அமைதியான சூழலில் கண்களை மூடி சில நொடிகள் கூர்மையாக கவனித்தேன். அப்பொழுது கடிகாரத்தின் டிக் டிக் ஓசை எனக்கு கேட்டது. ஆகவே என்னால் எளிதாக கண்டுபிடிக்க முடிந்தது' என்றான். சிறுவனுடைய அறிவுத்திறனை கண்டு விவசாயி பரிசளித்தார்.

தம்பி தங்கச்சி, பலர் குழு ஜெபம் மட்டும் போதும்னு நினைக்கிறாங்க. அது ரொம்ப தவறு. குழு ஜெபம் எந்த அளவிற்கு அவசியமானதோ அதே அளவிற்கு தனி ஜெபமும் அவசியமாகும். இப்பொழுது சொல்லுங்கள்.. தனி ஜெபம் முக்கியமா? குழு ஜெபம் முக்கியமா? வெரிகுட் இரண்டு ஜெப முறைகளும் சமநிலையில் முக்கியமானது தான். நம்ம இயேசப்பா தனியாகவும் ஜெபித்தார் (லூக்கா 5:16), தனது சீஷர்களுடனும் ஜெபித்தார் (லூக்கா 9:18) என வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆகவே, நீங்கள் கற்றுக்கொண்ட இந்த உண்மையை மறக்காமல் உங்க நண்பர்களுக்கும் சொல்லுங்க.

ஆதலால், நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்ளுவீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன். (மாற்கு 11:24)

இந்த பகுதி உங்களுக்கு பிரயோஜனமாக இருந்திருக்கும் என நம்புகிறேன். உங்கள் மேலான கருத்துக்களை 9750381784 என்ற எண்ணிற்கு குறுஞ்செய்தி மூலம் தெரியப்படுத்துங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.. அடுத்த இதழில் உங்களை மறுபடியும் சந்திக்கிறேன்.. டாட்டா...

## ஜெபியுங்கள் ! தாங்குங்கள் !!

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள், எனவே உங்கள் சாட்சிகளை எழுதி அனுப்புங்கள். பத்திரிக்கை ஊழியத்தின் தேவையை சந்திக்க ஒரு வெளியீட்டிற்கு ஆகும் செலவு ரூ.**1,25,000.** உதாரத்துவமாய் கொடுத்து உதவுங்கள் அல்லது உங்களால் இயன்ற அளவு கொடுத்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள் நன்றி.



# ஞானத்தின் இரகசியங்கள்

## THE SECRETS OF WISDOM

**Rev.P.ஜான் பரணீஸ்வரன்**

உதவி இயக்குநர், கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியம்

**முன்னுரை:** படிக்கும் மாணவர்கள் மற்றும் வேலை செய்பவர்கள், தொழில் செய்பவர்கள் மட்டுமல்ல, வேறு எந்த துறையில் சாதிக்க விரும்புகிறவர்களுக்கும் ஞானம் என்பது அவசியமாக உள்ளது. நாம் ஞானம் வேண்டி ஜெபிக்கவும் செய்கிறோம். ஆனால் வெறும் ஞானம் மட்டுமல்ல அதோடு தேவன் தரும், அநேக காரியங்கள் உண்டு. அதைத்தான் ஞானத்தின் இரகசியங்கள் என்ற தலைப்பில் இங்கு தியானிக்கப்போகிறோம்.

### ஞானத்தின் இரகசியங்கள்:
### The Secrets of wisdom

விளக்கம்: யோபு 11:6-ல் இந்த வார்த்தைகள் வருகிறது. ஞானம் என்றால் என்ன என்பது குறித்தும், அத்துடன் தேவன் தரும் அறிவுசார்ந்த பொக்கிஷங்களை அறிந்துகொள்வதுமே இதன் நோக்கம்.

ரோமர் 11:33-ல் ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் என்று எழுதப்பட்டுள்ளது. (The depth of riches and wisdom and knowledge). எனவே ஞானம், அறிவு புத்தி இவைகளைக்குறித்து ஆழமாக அறிவது அவசியம்.

### ஞானம், அறிவு புத்தி என்பவைகளின் ஆழம்
### The depth of riches and wisdom and knowledge

ஆதி.41:33-ல் ஞானமும், விவேகமும் என்று வருகிறது. இதற்கு ஆங்கில மொழிபெயர்ப்புகளில் கீழ்கண்ட வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**i. Discerning - பகுத்தறிதல்**

1இராஜா. 3:9-ல் நன்மை தீமை இன்னதென்று வகையறுக்கும் ஞானம் என்று உள்ளது. (Discern between good and bad (evil) (or) right and wrong). இந்த அறிவு நமக்கு இருந்தால், படிப்பு மட்டுமல்ல எல்லா காரியங்களிலும் வெற்றி பெறலாம்.

**ii.Intelligent - நுண்ணறிவு,** மிக நுட்பமான அறிவு Micro knowledge என்று கூட சொல்லலாம். எந்த ஒரு காரியத்தைக் குறித்தும், மிக நுட்பமாக அறிந்துகொள்ள வேண்டும். 1இராஜா.4:29-ல் சாலமோனுக்கு மிகுதியான ஞானம் கிடைத்தது. இதில் Insight என்ற வார்த்தை உள்ளது. அதுவும் நுண்ணறிவு அல்லது நுட்பமான அறிவு எனப்படும்.

**iii.Understanding- புரிதல்,** எந்த ஒரு காரியத்தையும் அறிவதோடு, அதை நுட்பமாய் அறிவதும், அதைக்குறித்து நன்றாய் புரிந்து கொள்வதும் மிகவும் அவசியம். மாணவர்களுக்குப் பாடமும், நமக்கு வேதமும் நன்றாய் தெரிந்தாலும் புரிவதில்லை. 1இராஜா. 4:29-ல் Breadth of understanding என்று வருகிறது. எதிலும் விரிவான புரிதல் அவசியம்.

**iv. Largeness of heart -** மனோவிருத்தி. எந்த ஒரு காரியத்தைக் குறித்தும் ஆழமாய் யோசிக்கும்போது, அதிலிருந்து புதிய சிந்தனைகள் தோன்றும். சாலமோனுக்கு கடற்கரை மணலத்தனை மனோவிருத்தி இருந்தது (1இராஜா.4:29). சாலமோன் அதை வளர்த்துக்கொள்ள என்ன செய்தான் என்று பிர.1:13-ல் கூறப்பட்டுள்ளது. மனதை பிரயோகம் பண்ணினான். (Set my heart, Applied my mind) என்று உள்ளது.

**v. Proficient-**திறமையான எல்லாவற்றை அறிவது முக்கியம்தான். ஆனால் அதை நடைமுறைப்படுத்தாதவரை எதுவும் பயனில்லை. பிர.9:10-ல் ஞானம், அறிவு, செய்கை, வித்தை என்ற 4 வார்த்தைகள் வருகிறது. அது ஆங்கிலத்தில் Knowledge, Wisdom, Planning, Working என்று இருக்கிறது. எதையும் அறிவதில் மட்டுமல்ல செய்வதிலும் நுட்பம் அவசியம். யாத்.31:3-ல் expertise என்ற வார்த்தை உள்ளது. இதை செய்வதில் நிபுணத்துவம் என்று பொருள்கொள்ளலாம். Skill, ability என்ற வார்த்தைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதை திறன், திறமை என்று புரிந்து கொள்ளலாம். எனவே அறிந்து, புரிந்து, திட்டமிட்டு, செயல்படுதல் அவசியம்.

**vi.Sound wisdom and discretion-**மெய்ஞானமும் நல்லாலோசனையும். நீதி.3:21-ல் இந்த வார்த்தைகள் வருகின்றன. Discretion என்ற வார்த்தைக்கு விவேகம் அல்லது முன்யோசனை (முன் ஜாக்கிரதை) என்று அர்த்தங்கொள்ளலாம். விவேகம் என்பதற்கு prudence என்ற வார்த்தையும் உள்ளது. எனவே அறிவில், மேம்பட்ட அறிவு என்பது இனி என்ன நடக்கும் என்பதை முன்பே அறிந்து, ஜாக்கிரதையாய் செயல்படுவது ஆகும்.

**vii.Witty invention -** நல்யுக்தியான அறிவு. நீதி.8:12-ல் இந்த வார்த்தை வருகிறது. இதுவரை நாம் கேட்டது, கற்றது, அறிந்ததை நன்றாய் புரிந்து, அதைச்செய்ய நிபுணராய் மாற வேண்டும் என்று பார்த்தோம். இந்த வசனத்தின் மூலம் நாமே புதிய காரியங்களை சிந்தித்து கண்டுபிடிக்க வேண்டும் என்பதை அறிகிறோம். அது பிறருக்கும் பயன்படும்.

**viii.Outstanding wisdom and light-**ஞானமும் விவேகமும் வெளிச்சமும். தானி.5:11-ல் இந்த வார்த்தை வருகிறது. வெளிச்சம் என்பதற்கு enlightment என்றுமுள்ளது. இதற்கு எந்த ஒரு காரியத்தையும் குழப்பமின்றி தெளிவாக விளங்கிக்கொள்வது என்று பொருளாகும்.

**முடிவுரை:** இந்த கட்டுரையில் ஞானம், அறிவு, புத்தி என்பதைக் குறித்த சில ஆழமான அர்த்தங்களைக் கற்றுக்கொண்டோம். எனவே இனி நாம் தேவனிடம் ஜெபிக்கும்போது, ஞானம் தாரும் என்று மட்டும் கேட்காமல், இந்த ஞானத்தின் ஆழங்களையும் கேட்போம். அவர் நம்மைக் கடிந்துகொள்ளமல் சம்பூரண ஞானத்தைத் தருவார் (யாக்.1:5). பெசலயேலை ஞானத்தின் ஆவி நிரப்பியதுபோல (the spirit of wisdom) நம்மையும் நிரப்பும் (யாத்.28:3).

---

REAL FAITH IS NOT RECEIVING FROM GOD WHAT YOU WANT; REAL FAITH IS ACCEPTING FROM GOD WHAT HE GIVES!

உண்மையான விசுவாசம் என்பது நாம் விரும்புவதை தேவனிடமிருந்து பெற்றுக்கொள்வது அல்ல. உண்மையான விசுவாசம் என்பது தேவன் நமக்குத் தருவதை ஏற்றுக்கொள்வதாகும்!

Adrian Rogers



# முன்னேறி செல்

## Move Forward


**Rev. பெகின் சாமுவேல்**

இயக்குநர், தமிழ் பிரதேச சிறுவர் ஊழியங்கள்


ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இந்த இதழின் வாயிலாக உங்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். தேவனுடைய பெரிதான தயவினாலும், கிருபையினாலும் தமிழ்ப்பிரதேச சிறுவர் ஊழியத்தின் மூலமாக நடைபெற்ற அனைத்து ஊழியங்களையும் ஆசீர்வதித்து வருகிறார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக. நடந்து முடிந்த தமிழ்ப்பிரதேச மாநாட்டில் சபைக்கு வெளியே உள்ள பிள்ளைகளுக்கு நடத்தும்படியாக வெளியிடப்பட்ட (Out Door) மூன்று வருட காலத்திற்கான பாடத்திட்டத்தை உள்ளடக்கிய ரோயே என்ற புத்தகத்தின் Hindi பதிப்பை வெளியிட தேவன் உதவி செய்தார். தேவ நாமத்திற்கே மகிமை உண்டாகட்டும். ஞாயிறு பள்ளி நடைபெறாத சபைகள் இருக்குமானால் இந்த வருடத்திற்கான புத்தகங்களை நமது AGCM அலுவலகத்தை தொடர்பு கொண்டு வாங்கி பயன்படுத்துங்கள்.

பிலி. 3:14-ல் வாசிக்கும்போது ‘இலக்கை நோக்கித் தொடருகிறேன்’ என்று பவுல் எழுதுகிறார். இன்று சற்று நாம் சிந்திப்போம். நம்முடைய வாழ்க்கை எப்படி செல்கிறது? ஆவிக்குரிய வாழ்விலும், சரீர வாழ்விலும் முன்னேறி செல்கிறோமா? அல்லது எங்கோ தேக்க நிலையில் தேங்கிபோய் இருக்கிறோமா? இதை வாசிக்கிற உங்களை தேவ ஆவியானவர் உந்தி தள்ளி முன்னேறி செல்ல ஏவுகிறார். உங்கள் ஜெபத்தில், வேத வாசிப்பில், சபை கூடி வருதலில் முன்னேறுகிறீர்களா? அல்லது சோர்ந்து போய் இருக்கிறீர்களா?

### 1. விட்டுவிடாமல் தொடர்ந்து முன்னேறுங்கள் - Never Give up

தாமஸ் ஆல்வா எடிசன் பல்பை கண்டுபிடிப்பதற்கு முன்பு 1000 முறை தோல்வியை சந்தித்தார். ஆனாலும் விட்டு விடவில்லை. J.K. Rowling's 'Harry Potter' என்ற புத்தகம் வெளியானால் சில நிமிடங்களில் உலகமெங்கும் விற்றுத் தீர்ந்துவிடும் என்பது நாம் அறிந்ததே. ஆனால் அதற்கு முன்பாக முதல் பதிப்பை வெளியிட சுமார் 12 பதிப்பாளர்கள் முன்வரவில்லை. ஏதோ ஒரு இழப்பு வந்ததினால் அதையே நினைத்து உன் ஓட்டத்தை நிறுத்தி ஒரே இடத்தில் இருக்கிறாயா? எலியாவும் சில எதிர்ப்புகள் அவனுக்கு வந்ததினால் சூரைச்செடியின் கீழ்போய் படுத்துக் கொண்டான். ஆனால் ஆண்டவர் அவனைத் தட்டி எழுப்பி முன்னேறி செல்ல சொன்னார். சோர்வு பிசாசு கொண்டு வருகிற திட்டம். அவன் நம் வாழ்வை அழிக்க வைத்திருக்கும் திட்டம்தான் அது. அதற்கு இடமளிக்காதிருங்கள்.

### 2. உங்களை சுற்றி நேர்மறையானவர்களை வைத்திருங்கள் - Surround yourself with supportive people

உங்கள் நண்பர்கள், உறவினர்கள் யாராக இருப்பினும் உங்கள் தரிசனத்தை அறிந்த, உங்களை உற்சாகப்படுத்துகிறவர்களோடு உங்கள் ஐக்கியத்தை வைத்திருங்கள். யோனத்தான் தன்னுடைய தரிசனமாகிய பெலிஸ்தரை வீழ்த்தும் திட்டத்தை அறிந்து தனக்கு உதவி செய்கிற ஆயுததாரியை வைத்திருந்தான். இரண்டு

பேரும் அன்று  முழு பெலிஸ்த படைகளுக்குள் புகுந்து ஒரு கலக்கத்தை ஏற்படுத்தி எதிரிகளை அழித்து முன்னேறி சென்றனர்.

**3. உங்கள் முன்னோக்கிய ஒவ்வொரு அடியும் உங்கள் இலக்கை உங்கள் அருகில் வரவைக்கிறது - Every step forward is a step closer to your goal**

சூழ்நிலைகளை பார்த்து முன்னோக்கி செல்ல தயங்காதீர்கள். தைரியமாக உங்கள் அடியை எடுத்து வையுங்கள். யோசுவா ஆசாரியர்களிடம் தேவத்திட்டமான யோர்தானை கடந்து செல்ல வேண்டும், அதற்கு ஆசாரியர்களின் கால்கள் யோர்தானில் பட வேண்டும் என்ற சொன்னபோது, அவர்கள் ஒரு வேளை யோர்தான் பிரியவில்லை என்றால் நாம் மூழ்க வேண்டியதிருக்குமே என்று நினைக்காமல் வந்து யோர்தானின் கரையில் நிற்கிறார்கள். யோர்தான் கரை புரண்டு ஓடுகிறது. ஆனால் ஆசாரியர்கள் அதைக்கண்டு பயப்படாமல் தங்கள் கால்களை எடுத்து வைத்த மாத்திரத்தில் யோர்தான் இரண்டாய் பிரிந்தது.

தேவபிள்ளைகளே, நம் வாழ்க்கையின் பயணம் எப்போதும் மிக சுலபமாக இருக்காது. செங்கடல், யோர்தான், எதிரிகள் என்று பல தடைகள் வந்தாலும் சோர்ந்திடாமல்  தொடர்ந்து முன்னேறுவோம். கர்த்தர் நம்மோடிருக்கிறார்.

ஜெயக்கிறிஸ்து முன் செல்கிறார், ஜெயமாக நடத்திடுவார்.

---


ASSEMBLIES OF GOD

ஜெபியுங்கள்! பங்கு பெறுங்கள்!

A.G. தமிழ் பிரதேச ஆண்கள்

# 15வது மாநில முகாம்

கருப்பொருள்

"என் சகோதரரே, கர்த்தரிலும், அவருடைய சத்தவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்" (எபே.6:10)

செய்தியாளர்கள்

**Rev.பால் தங்கையா** AIAG, Superintendent

**Rev.ஆபிரகாம் தாமஸ்** SIAG, Superintendent

**Rev.ஸ்டீவ் ஜெயராஜ்** TDCAG, Superintendent

நாள்: **02.10.2024** புதன்கிழமை

நேரம்: காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை

முன்பதிவு கட்டணம் ரூ.100/-

இடம்: ஏ.ஜி. கேம்ப் சைட் நாகதீர்த்தம் விலக்கு மதுரை

- மகிமையான ஆராதனை!
- உயிரூட்டும் தேவ செய்திகள்!
- நடைமுறை ஆலோசனைகள்!

துதி ஆராதனை **Pr.ரீகன் கோமஸ்**

Rev.Dr.ஆலன் பிராஸ்பர்,    Rev.J.சாமுவேல் ஜெபராஜ்,    Rev.N.சொர்பான்

மற்றும்

ஆண்கள் ஐக்கிய மண்டல ஒருங்கிணைப்பாளர்கள்

செல் : 98421 71014

## பரிபூரண ஜீவன் போட்டி எண் - 6 (சரியான விடைகள்)

1. சாந்தகுணமுள்ளவன் - மோசே (12:3)
2. வேறே ஆவியை உடையவன் - காலேப் (14:24)
3. ஆவியை பெற்றிருந்த புருஷன் - யோசுவா (27:18)
4. பக்தி வைராக்கியம் காட்டியவன் - பினெகாஸ் (25:11).
5. ஓர் மலையில் மரித்தவன் - ஆரோன் (33:38)
6. யோசேப்பின் குமாரன் - எப்பிராயீம் (1:10).
7. ஆரோனின் குமாரன் - எலெயாசார் (3:32).
8. அம்மினதாபின் குமாரன் - நகசோன் (7:12).
9. சிப்போரின் குமாரன் - பாலாக் (22:2).
10. பல்லூவின் குமாரன் - எலியாப் (26;8)
11. இஸ்ரவேலின் மூத்த குமாரன் - ரூபன் (26:5)
12. மிகாவேலின் குமாரன் - சேத்தூர் (13:13).
13. ஆசானின் குமாரன் - பல்த்தியேல் (34:26).
14. இத்சேயாரின் குமாரன் - கோராகு (16:1).
15. மனாசேயின் குமாரன் - யாவீர் (32:41)
16. காதேசில் மரித்த ஒருத்தி - மிரியாம் (20:1).
17. செலொப்பியாத்தின் குமாரத்திகளில் ஒருத்தி - மில்காள் (36:11).
18. லேவியின் குமாரரில் ஒருவன் - கெர்சோன் (3:17).
19. மீதியானியரின் ஐந்து ராஜாக்களில் ஒருவன்-ரேபா (31:8).
20. பாளயத்தில் தீர்க்கதரிசனஞ்சொன்னவர்களில் ஒருவன் - எல்தாத் (11:26).
21. இச்சித்த ஜனங்களை அடக்கம் பண்ணின இடம் - கிப்ரோத் அத்தாவா (11;34)
22. வாக்குவாதம் பண்ணின இடம் - மேரிபாவின் தண்ணீர் (20:13)
23. கர்த்தருடைய அக்கினி பற்றியெரிந்த இடம் - தபேரா (11:3).
24. கிராமங்களைக் கட்டிக்கொண்ட இடம் -நோபாக் (32:41)
25. அறுத்த திராட்சக்குலையினிமித்தம் பெயரிட்ட இடம் - எஸ்கோல் பள்ளத்தாக்கு (13:24).

---

## "விசுவாசியே! விலகி வா!"

1. வீண் பேச்சுக்கு விலகு (1 தீமோ.6:20; யாக்.1:26; சங்.141:3)
2. வேசித்தனத்திற்கு விலகு (1 கொரி.6:18; வெளி.2:14; எரே.3:9-10)
3. மாறுபாடுள்ள சந்ததியை விட்டு விலகு (அப்.2:40; 2 கொரி.6:14; லேவி.20:26).
4. பாலிய இச்சைகளுக்கு விலகு (2 தீமோ.2:22; 1 யோவான் 2:16; ரோமர் 13:14).
5. மாய்மாலக்காரனுக்கு விலகி வா (2 தீமோ.3:5; தீத்து 3:10; யூதா 12 வசனம்)

## போட்டி எண் : 6 (சரியான விடை எழுதியவர்கள்)

**செங்கோட்டை**: லீதியாள்; பூங்கோதை ; கலைவாணி; மதி; விஜி; சித்ரா பிளஸ்சி; கிரிஜா; குளோரி; எஸ்தர்; T.கலா; E.கலா; மாது; கோகிலா; அன்னாள்; ராணி பிளஸிங்; J.சுமதி; ராதா; S.முத்துலெட்சுமி; பிரபா; V.பியூலா; கிறிஸ்டி; மொர்ஸிராஜம்; மாலா; இவாஞ்சலின்;ஜெயசிலின்; மரகதம்; முத்துகோபால்; மஞ்சு; |**இறச்சகுளம்**: M.கலா; ஷாலினி; தர்ஷினி; எஸ்தர்; சுபாஷினி; ஜெஸ்மின்; கனகமணி; |**ஆறுமுகநேரி**: அனன்சி அருண்; ஜோதி மீனா; இருதய ஸ்டெர்லின்; ஏஞ்சல்; செல்வபிரியா; நிவேதா; எஸ்தர் வெண்ணிலா; |**எடப்பாடி** : அஞ்சலி அரசு; எப்சிபா; சுதா; மாலதி; பிரியதர்ஷினி; |**திருநின்றவூர்**: மாலதி; கேத்ரின்; வின்சி; லீலாபரணி; எழிலரசி; | **ஆலங்குளம் (வி)**: ஸ்டெல்லா மேரி; மரியாள்; K.ஸ்டெல்லா; ரெஜினா சாரு; |**மடத்துக்குளம்**: கிரேஸ்மேரி; ஜெனிட்டா ஜூலியெட் மேரி; சரண்யா; பரிமளா காலேப் |**நெல்வாய்** : அருணா; வெஸ்லி விஜயகுமார்; கற்பகம்; மலர்விழி| **ஸ்ரீவில்லிபுத்தூர்** : காபிரியேல்; நித்யா; அழகு நாச்சியார்; மெசி; ஜெயராணி; நெல்சன் செல்வராஜ்; | **கடையநல்லூர்**: பெல்சியா; செல்வி இந்திராணி; வினோலியா; ஸ்டெல்லா;|**நாகமலை**: ஆனந்தி; விஜிலா; ஹில்டா எலிசபெத்; | **சேத்துப்பட்டு** : மாதரசி; மரகதம்; பெர்சியாள் செல்வி; ரெக்ஸி ஈஸ்வரன்; | **சென்னை**: மெர்லின் ஹெலன் பிரிதியா; மரகதலீலா; மேரிகுட்டி; |**மதுரநாந்தகம்**: கிரேஸ் பியூலா; சரண்யா; பவித்ரா; | **இராமன்புதூர்**: லீதியாள்; ஜான்சி ராணி; அன்னம்மாள்; |**கோயம்புத்தூர்** : லூர்து மேரி டென்சில்; கிறிஸ்டினா அபிகாயில்; குளோரி பால்; | **நாசரேத்**: தாசன் மோசஸ்; எஸ்தர்; மெர்சி; | **தேனி** : J.கிருபா; கார்த்திகேயாணி; செண்பக புஷ்பா ஜேம்ஸ்; தனம்; | **திருச்சி** : K.சாந்தி; ஷெர்லி; ஜஸ்டஸ் டேனியல்; | **K.T.C.நகர்**: பிரேமா ரூத்; ஷில்வியா கிறிஸ்டோபர்; |**மதுரை**: பவித்ரா ஏஞ்சல்;M.கனகவல்லி; **வேப்பம்பட்டு** : ஜோஸ்மேரி பாளையம்; நிர்மலா குமாரி; |**ஆண்டிபட்டி**: தபீத்தாள் ராணி; தேவபாக்கியம்; |**கூத்தாநல்லூர்**: கிளமாண்டின்; S.A.M.பாஸ்டியன்; |**கொட்டிவாக்கம்**: எஸ்தர் விஜயராணி; அஞ்சலி; |**ஏழாயிரம் பண்ணை**: ஜாய்; |**ஓசூர்** : ஐடா மனோகரன்; ஜிம் ரிச்சர்ட்; |**புளியங்குடி** : M.ஜெபராஜம்; G.ஜெயமணி; |**சேலம்** : பெட்ரிஷியா டேவிட்; ஜான்சி ராணி; T.இந்திரா; |**கவரைப்பேட்டை**: தங்கம்; புவனா; |**கோவில்பட்டி**: ரேச்சல்; அமுதா கனி; |**டெலானியூர்**:J.M. ஜாக்லின்; ஜெயந்தி; |**T.N.பாளையம்**: J.ஜெப்ரின் இம்மானுவேல்; சுஜா; |**திரேஸ்புரம்**: சில்வெஸ்டர்; புரூசிமா; **வெள்ளைகால்**: S.கலா; **நாகலாபுரம்**: லில்லி ஜெனட் தங்கம்; |**கோடம்பாக்கம்**: சுந்தரிபாய்; |**தேவகோட்டை**: மனோஜினி ரஜீன்; |**கொங்கத்தான் பாறை**: சந்திரா ஆல்பர்ட்; **களக்காடு**: விமலா மேரி; |**G.N.பாளையம்** : மேரி வின்சென்ட்; |**கட்டபெட்டு**: புஸ்பமாலா: **கடலையூர்**: ஆபிரகாம்; |**திருமலைநகர்**: ரோஸி; |**வடக்குகோணம்**: மரியநேசம்: |**தர்மபுரி**: ரூத்; | **வெண்ணாம்பட்டி**: எப்சிபா; |**சேர்ந்தமங்கலம்**: பாத்திமா அக்பின்; இடைகால்: செல்வி ஜான்சன்; |**காடட்சபுரம்**: சுசிலா; ரேவதி கில்பர்ட்; |**மூக்குப்பேறி**: செல்லத்தாய் ராணி;**ஆழ்வார் குறிச்சி**: ஹரிலீலா; |**ஆவடி** : சந்திரா சாலொமோன்ராஜ்; |**கல்லல்**: அபிஷாக்; |**கம்பம்**: ஜோதிமணி; |**சாத்தூர்**: சரோஜா ஜெயச்சந்திரன்; |**கள்ளக்குறிச்சி** : தங்கம் சாக்கோ; |**அய்யப்பாளையம்**: அம்மணி; |**நாகப்பட்டினம்**: வின்சென்ட் ராஜ்; |**திருச்செந்தூர்**: தேவதாஸ்; |**பாளையங்கோட்டை**: கலா பிரசாத்; |**இலுப்பையூரணி**: V. வால்டர் சிங்; |**உக்கடம்**: ரத்தினம்; |**திருக்கழுக்குன்றம்**: உமா தேவஜோதி; |**கூவத்தூர்**: எட்வர்ட்;| **உக்கிரன்கோட்டை**: குழந்தை திரசம்மாள்; |**நாவல்பட்டு** : B. ஸ்டெல்லா ராணி; |**அரசூர்**: ரோஸ்லின் சாந்தி; | **பெருங்குளம்**: A. பியூலா; |**பழனி**: T. பிரீத்தி; |**குரோம்பேட்டை** : கோமதிகுமார்; |**குறிச்சி**: S.விக்டர்; | **தெப்பக்குளம்**: வனத்துமேரி; |**நெய்யூர்**: ஷீலா ராபர்ட்; |**தஞ்சாவூர்**: தேவகுமார்; |**ஏர்வாடி**: மரகதம்;| **காட்பாடி**: ஜேனட் ஜெயசிலின்; |**பெங்களூர்**: தேவபிரியா; |**அகரம் தென்**: P. ஜாய் கிளாடிஸ்; |**அச்சிறுப்பாக்கம்**: ரோஸ் பாண்டியன்; |**பசுவந்தனை**: கிருபா ஜெப்ரி; |**ஆத்தூர்**: மணிமேகலை; |**ஸ்ரீவைகுண்டம்**: S.முத்துக்குமார் சங்கீதா; |**திண்டிவனம்**: சாராள் அறிவுச்செல்வி; **திண்டுக்கல்**: லதா ஜான்சன்.

## பரிபூரண ஜீவன் போட்டி எண்-7
## உபாகமம்
## (இருப்பிடத்துடன் தேவையான வார்த்தையை மட்டும் எழுதுக)

1. உன் ____________ உன் தேவன் அவரே
2. உன் ____________ கொண்டு வரக்கடவன்.
3. உன் ____________ வழங்காதிருப்பாயாக.
4. உன் ____________ உத்தமனாயிருக்கக்கடவாய்.
5. உன் ____________ ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்.
6. உன் ____________ அடங்குவார்கள்.
7. உன் ____________ கொடுக்கப்படவேண்டும்
8. உன் ____________ இன்று அறியக்கடவாய்
9. உன் ____________ நீ கடந்து போவதில்லை.
10. உன் ____________ அவன்மேல் கல்லெறியக்கடவாய்.
11. உன் ____________ படிகளையும் வைத்திருக்க வேண்டாம்.
12. உன் ____________ பிரவேசிக்கப்பண்ணுகிறார்.
13. உன் ____________ உன் பெலனும் இருக்கும்.
14. உன் ____________ வருகிறார்.
15. உன் ____________ அன்பு கூறுவாயாக.
16. உன் ____________ விட்டுவிடக்கடவது.
17. உன் ____________ நிறைவேற்ற வேண்டும்.
18. உன் ____________ எரிச்சலுள்ள தேவன்.
19. உன் ____________ தீட்டுப்படுத்தாயாக.
20. உன் ____________ மறக்கவுமாட்டார்.
21. உன் ____________ இரங்காதிருப்பதாக.
22. உன் ____________ ராஜாவாக வைக்கக்கடவாய்.
23. உன் ____________ கைவிடாதபடிக்கு எச்சரிக்கையாயிரு
24. உன் ____________ விதைக்காயாக.
25. உன் ____________ கடந்து போவார்.
26. உன் ____________ விலகியிருப்பாயாக.
27. உன் ____________ ஒடுக்காயாக.
28. உன் ____________ அநுபவிப்பாயாக.
29. உன் ____________ அறிவிப்பான்.
30. உன் ____________ கூறக்கடவாய்.

---

விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 5.10.2024



**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**


**Mrs.சாந்திபால்**
16/50 கொல்லம் மெயின் ரோடு, சீயோன் ஏ.ஜி. சர்ச்
SETC BUS டிப்போ அருகில், செங்கோட்டை - 627 809
தென்காசி (மாவட்டம்). செல் : 88077 18002

## மெய்ஞானபுரம் ஆலய பிரதிஷ்டை





## தாம்பர மண்டல ஆண்கள் ஐக்கிய முகாம்





## Evangelism and Church Planting Department Replication Initiative- Vision Casting Meeting, Trichy






## திருச்சி மத்திய மண்டல வாலிபர் முகாம்









## உடுமலைப்பேட்டை மண்டல பெண்கள் முகாம்








**BOOK POST**

If Undelivered please return to

**PARIPOORANA JEEVAN**

30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 4200664